Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 18 வெள்ளிக்கிழமை (02.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 094

# யாழ்ப்பாணத்தில் இன்று ஜனாதிபதி



## ✸ காங்கேசனில் ரயில் நிலையம் திறப்பு ✸ யாழ். நகரில் பிரசாரக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இன்று இடம்பெறவிருக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரைநிகழ்த்தவுள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்காக இன்று யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலை பலாலி விமான நிலையத்தை வந்தடையும் ஜனாதிபதி அங்கிருந்து காங்கேசன்துறைக்குச் செல்வார்.

காங்கேசன்துறை ரயில் நிலையத்தைத் திறந்து வைக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முதலாவது பயணியாக அங்கிருந்து யாழ்ப்பாணம் நகரை வந்தடைவார்.

அதன் பின்னர் காலை 9.30 மணியளவில் ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெறும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து துரையப்பா பொது விளையாட்டரங்கில் இடம்பெறும் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்பார். பின்னர் மன்னார், வவுனியாவில் நடக்கும் பரப்புரைக் கூட்டங்களில் ஜனாதிபதி பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முல்லை அமைப்பாளராக வைத்துவர் சண்முகராசா

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளருமான கனகரத்தினம் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவரிடத்திற்கு வைத்தியர் சண்முகராசா நியமிக்கப்பட்டுள்ளார். பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடாமை காரணமாக நாமல் ராஜபக்ஸவினது அறிவுறுத்தலையடுத்தே கனகரத்தினம் நீக்கப்பட்டுள்ளார்.

# கூட்டமைப்பின் முடிவு தவறானது

(கொழும்பு)

பொது வேட்பாளர் மைத்திரிக்கு ஆதரவு தெரிவிப்பது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எடுத்த முடிவு தவறானது என்றும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்மானம் ஒன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஐ.பி.ஸி. தமிழ் சேவைக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் இருப்பதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

## சுரேஸ் போர்க்கொடி

தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு இரண்டாவது விருப்பு வாக்குகளை செலுத்தி அதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளில் வெற்றி பெற்ற பொது வேட்பாளர் என்ற கருத்தை தோற்றுவிக்கலாம் என்ற யோசனையைக்கூட கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரதிஉயர்கல்வி அமைச்சர் மைத்திரிபக்கம் தாவல்

உயர்கல்வித்துறை பிரதி அமைச ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பிலான பொது வேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக கல்வித்துறை துணை அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க நேற்று எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளருக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மைத்திரிபால சிறிசேனவின் மாவட்டமான

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் படை முகாம்கள் எதுவும் அகற்றப்படமாட்டாது

## பிரசாரக் கூட்டத்தில் மைத்திரி

நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் வடக்கில் இருக்கும் எந்த ஒரு இராணுவ முகாமும் அகற்றப்பட மாட்டாது என பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆனால், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து பணியாற்றக் கூடிய சூழல் உருவாக்கபடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன, மொழி மத பேதமின்றி புதிய அரசாங்கம் ஒன்றின் தேவை குறித்து மக்கள் பேசி வருகின்றனர். அதற்காக மக்கள் ஒன்றுப்பட்டுள்ளனர்.

பொது விடயங்கள் காரணமாக சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கி மக்கள் அரசாங்கம் மாற வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆணின் சடலம் கனகராயன்குளத்தில் மீட்பு

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் அடிகாயங்களுடன் ஆணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சடலமாகக் காணப்பட்டவர் வவுனியா, கத்தார் சின்னக்குளத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான எஸ்.ரெனி (வயது 37) என அடையாளம் காணப்பட்டுள்ளது. மேசன் வேலைசெய்து வரும் இவர் கனகராயன்குளம் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்து வந்துள்ளார். வீட்டு உரிமையாளர் நேற்று நண்பகல் 2 மணியளவில் அங்கு சென்றபோது வீட்டு விறாந்தையில் அடிகாயங்களுடன் இறந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார். உடனடியாக கனகராயக்குளம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். மண்வெட்டிப் பிடி மற்றும் கொங்கிறீட் கற்களால்

(19) ஆம் பக்கம் பார்க்க


## தொடரும் பணிப்பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் வைத்தியர்களுக்கு அண்மையில் அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்கவேண்டுமெனக் கோரி 3 தினங்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக தாதியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை முதல் 3 தினங்களுக்கு இப்பணிப்பகிஷ்கரிப்பு நீடிக்கும் எனவும், அவசர உயிர் காப்பு சேவை மாத்திரம் இயங்கும் வகையில் ஊழியர்கள் பணியில் ஈடுபடுவர் எனவும் இதில் தாதியர்கள், மருத்துவ பணியாளர்கள், சிற்றூழியர்கள் என அனைத்து தரப்பினரும் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(19) ஆம் பக்கம் பார்க்க



# வைத்தியசாலைக்கு வரும் வயோதிபர்கள் தங்கநகை அணிவதை தவிர்க்கவும்

## - பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு கோரிக்கை -

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைக்த் சிகிச்சைக் காக வரும் வயோதிபர்கள் தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்க்குமாறு யாழ். பொலிஸ் நிலை குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் கோரியுள்ளனர்.

அடிக்கடி யாழ். போதனாவில் இவ்வாறு வயோதிபப் பெண்கள் தங்கநகைகளைக் கழற்றி இனந் தெரியாதோரிடம் கொடுத்துவிட்டு பல்வேறு கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

இது குறித்து முறைப்பாடு களும் பதிவுசெய்துள்ளனர். ஓரிரு தினங்களுக்கு முன்னரும் இவ் வாறு ஒரு மூதாட்டி தெரிவித்த துடன், ஒரு வைத்தியசாலை சிற் றூழியரையும் தவறாக இனங் காட்டி பல்வேறு இன்னல்க ளுக்கு ஆளாகியிருந்ததுடன், சிர மங்களுக்கும் முகம்கொடுத்துள்ள நிலையில் இவ்வாறு வயோதி பர்கள் தங்கநகை அணிந்து கொண்டு சிகிச்சைக்காக வரு வதை தவிர்த்துக்கொள்வதுடன், எந்தவொரு நபரிடமும் இவ்வாறு நகைகளை கழற்றி கொடுப்பதை தவிர்க்குமாறும் குற்றத்தடுப்பு பிரி வினர் கோரியுள்ளனர். (25,இ)

# தோளில் இருந்த "வாச்சி" இளைஞரின் உயிரை பறித்தது

(யாழ்ப்பாணம்)

மரம் சீவும் "வாச்சி"யை தோளில் வைத்துக்கொண்டு மோட் டார் சைக்கிளில் சென்ற இளை ஞர் விபத்துக்குள்ளானதில் படு காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் இராஜேஸ்வரன் (வயது - 31) என்ற இளைஞரே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் முள்ளிய வளை, ஐயனார் கோவிலடி பகு தியில் வீட்டு கூரைவேலை செய்து விட்டு தங்கிநிற்கும் இடம்நோக்கி மோட்டார் சைக்கிளில் தோளில் மரம் சீவும் வாச்சியை தொங்க விட்டபடி சென்றவேளை மாட்டு டன் மோதுண்டு விபத்துக்குள் ளாகியுள்ளார்.

இதன்போது பிரஸ்தாப இளை ஞரின் கழுத்து, தலைப்பகுதி வாச்சி வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மாங் சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள் ளார். (இ,25)

# முல்லைத்தீவு நகரில் டெங்கு பரவும் அபாயம்

முல்லைத்தீவு நகரத்தில் நீர் வழிந்தோடக்கூடிய சீரான வாய்க்கால்கள் அமைக்கப்படாததன் காரணமாக பல இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

நீண்ட நாட்களாக குட்டை போல நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்புகள் அதிகளவில் உற்பத்தியாகி டெங்கு நோய்த்தாக்கம் ஏற்படும் அபாயகரமான நிலைமை காணப்படுகின்றது.

போரினாலும் ஆழிப்பேரலையினாலும் பெருமளவு அழிவுகளை எதிர்கொண்ட இந்நகரத்தில் அழிவடைந்த பல கட்டடங்களில் பற்றை கள் வளர்ந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக நுளம்புகளின் பெருக்கம் இங்கு கூடுதலாகக் காணப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச சபை ஆகியன வாய்க்கால்களை புனரமைக்கும் மற்றும் புதிததாக அமைக்கும் பணிகளை முன்னெடுத்து வருவதாகவும், அனைத்து நடவடிக்கை களையும் உடனடியாக செய்ய முடியாதுள்ளது எனவும் நிதியுதவி கிடைக்கும் தருணத்தில் வாய்க்கால்கள் புனரமைக்கும் பணிகள் முன னெடுக்கப்படும் என மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேக்கு மர கடத்தல்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலு ள்ள காடுகளில் தேக்கு மரங்கள் அனுமதிப்பத்திரமின்றி வெட்டப் பட்டு கடத்தப்படும் நடவடிக்கை கள் அதிகரித்து காணப்படுவதாக கிளிநொச்சி பொலிஸார் தெரி வித்தனர்.

தேக்கு மரங்களை வாகனங்க ளில் கடத்துபவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி, அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன.

கடந்த 30 ஆம் திகதி 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 தேக்கு மரக்குற்றிகளை கன்ரர் ரக வாகனத்தில் கடத்திச் சென்ற சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு, கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட வேளை, நீதவான் எம்.ஐ.வகாப்தீன் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்தார்.



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் பிரதான தபாலகத் துக்கும், சத்திரத்துச் சந்திக்கும் இடைப்பட்ட கிழக்குப் பக்கமாக சென்று முனீஸ்வரன் வீதியை சந்திக்கும் வீதியில் பாலம் ஒன்று உடைந்து கழிவுநீர் தேங்கிய நிலையில் பல மாதங்களாக திருத்தம் செய்யப்படாமல் உள்ளதைக் காணலாம். (137)


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஜெ. ஆரிகா

முகவரி : காமாட்சிகேணியடி காரைநகர்.

அகவை 2 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




# இரு விபத்துக்களில் நான்கு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் நேற்று இடம்பெற்ற இருவேறு மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

வண்ணை சிவன்கோவிலடியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஆலயத்திற்கு சென்று திரும்பிய நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந் துள்ளனர்.

காரைநகர் வீதி, கொட்டடியைச் சேர் ந்த சிவகடாட்சம் (வயது - 53) சி.பத்ம மலர் (வயது - 52), சி.அபிரன் (வயது - 5) ஆகிய மூவரும் காயமடைந்த நிலை யில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச் சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை, காங் கேசன் துறை வீதி, சத்திரத்துச் சந் திக்கருகில் இடம் பெற்ற ஆட்டோ மோட் டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் காயமடைந் துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான அ.மரியகொறற்றி (வயது - 34) என்ற பெண்ணே தலையில் காயமடைந்துள்ளார். (இ,25)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

காணி அமைச் சின் கீழ் பிரதேச செயலகங்களில் காணி பயன்பாட்டு திட்டமிடல் உதவி யாளராக கடமை யாற்றியவர்கள் தற் போது காணி பயன் பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்க ளாக பதவி உயர்த் தப்பட்டுள்ளனர். (08)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2594 திகதி 31-12-2014

ஆங்கில எழுத்து: O

வெற்றி எண்கள்: 36 47 58 60

போனஸ் இல: 25

ஜக்பொட் பரிசு ரூ. **25,406,375/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 217825 | 20/- | 4,356,500/- |
| 2 இல் | 15551 | 100/- | 1,555,100/- |
| 3 இல | 329 | 1,000/- | 329,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8602 | 40/- | 344,080/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 619 | 1,000/- | 619,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 25,406,375/- | - |
| 1 இல + போனஸ் இல | 10360 | 100/- | 1,036,000/- |
| 2 இல + போனஸ் இல | 494 | 500/- | 247,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 413 | 200/- | 82,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 254224 | | 11,164,780/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2015.01.03 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 26,000,875/-

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே: 2333546/7

(C/3916)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | PROGRAM NAME (FRIDAY) |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலைச் செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | I.T.Com |
| Am 11.00 | சிரிக்கச் சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்கச் சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11:30 | நீங்காத நினைவுகள் |

# கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் 1911 குழந்தைகள் பிறந்துள்ளனர்

## வைத்தியசாலையின் புள்ளிவிபரம் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் 1,911 குழந்தைகள் பிறந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

பிறந்த குழந்தைகளில் 255 குழந்தைகள் நிறைகுறைவான குழந்தைகளாக பிறந்துள்ளதுடன், 10 குழந்தைகள் இறந்த நிலையில் பிறந்துள்ளன.

வைத்தியசாலை மகப்பேற்று பிரிவில் அனுமதிக்கப்பட்டவர்களில் 295 பேர் மேலதிக சிகிச்சைக்காக, யாழ்.போதனா வைத்தியசாலை, வவுனியா, அநுராதபுரம் மற்றும் கொழும்பு ஆகிய வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அத்துடன், வைத்தியசாலையின் கர்ப்பவதிகள் சிகிச்சையகத்தில் (கிளினிக்) இந்த வருடத்தில் 8 ஆயிரத்து 204 கர்ப்பிணிகளுக்கும் 1,513 பெண் நோயியல் தொடர்பானவர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு சிசு மரண வீதம் பூச்சிய நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆளுமை விருத்திக்கான பயிற்சிப்பட்டறை நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு இளைஞர்களின் ஆளுமை விருத்திக்கான முழு நேர பயிற்சிப் பட்டறை அப்பகுதி சமூக ஆர்வலரும் சட்டத்தரணியுமான க.சிவபாதத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது

பயிற்சிப் பட்டறைக்கான முதல் நாள் நிகழ்வினை வலி.வடக்கு பிரதேச செயலர் சிறீமோகன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தலைமையுரையினை சமூக சேவைகள் உத்தியோகத்தர் க.குணசிங்கம் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சமூக மாற்றத்தின் அவசியம், பிரதேச வளங்களை எவ்வாறு பயன்படுத்தலாம், அதில் இளையோரின் முக்கியத்துவம் பற்றி தனது அனுபவங்களை பனை அபிவிருத்தி சபைத் தலைவரும், சமூக ஆய்வாளருமான பசுபதி சீவரெத்தினம் மிகத்தெளிவாக எடுத்துக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ஆளுமை விருத்திக்கான பயிற்சிகள் நடைபெற்றன. பயிற்சிநெறியின் வளவாளர்களாக இந்துக்கல்லூரியின் கல்வி வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகரும், மாவட்டக் கல்வித் திணைக்களத்தின் உளவள துணை வளவாளருமான கு.மகிழ்ச்சிகரன் மற்றும் கலைஞர்களான வி.ஜெகநாதன், ச.பாலசிங்கம், சா.தங்கராசா, ப.தர்மானந்தசிவம். ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி முகாமின் பிரதான நோக்கமாக இளையோர்கள் தங்களை அறிதல், பிறரை அறிதல், கூட்டு செயற்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்தல் என்பன அமைந்திருந்தன.

# மேய்ச்சல் தரவைகள் இன்மை உணவின்றித் தவிக்கும் கால்நடைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாமல் சிரமப்படுவதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கௌரி திலகன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்ட பண்ணைகளில் 37 ஆயிரத்து 311 மாடுகளும், 6705 ஆடுகளும், 996 எருமைகளும் வளர்க்கப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்பும் விவசாயமும் காணப்படுகின்றது.

தற்போது விவசாய நிலங்கள் அனைத்திலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடமுடியாத நிலை காணப்படுகின்றது.

கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று பராமரிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

# முத்தையன்கட்டு குளத்தின் வான்கதவுகள் திறப்பு

முத்தையன்கட்டு குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததனால் குளத்தின் கொள்ளளவு சுமார் 22 அடி உயர்ந்து காணப்பட்டது.

இதன் காரணமாக முத்தையன்கட்டு வான் கதவுகள் 2 திறந்து விடப்பட்டுள்ளதுடன் அப்பகுதியிலுள்ள மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் முல்லைமாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் ரி.செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக இந்த வான்கதவுகள் மேலதிகமாக திறந்துவிடப்படும் வாய்ப்பு உள்ளதால் அனைத்து மக்களும் தமது பாதுகாப்புத் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (40)

# விபத்து

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி புதியசந்தை பகுதியில் நேற்றுமுற்பகல் 11.45 மணிக்கு சைக்கிளுடன் வடிவான் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் நெல்லியடியைச் சேர்ந்த செல்வம் (வயது 60) என்பவரே படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வடி வான் ஒன்று நெல்லியடிச் சந்தைக்கு சைக்கிளில் சென்ற இவர் மீது மோதியபோதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (18)

# அப்படியென்றால்...



## சம்பந்தன் சொல்கிறார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்திருக்கிறது.

ஆகவே தமிழ் மக்கள் மைத்திரிக்கே வாக்களிக்க வேண்டும்.

மைத்திரிக்கு வாக்களிக்கும்படியே நாங்கள் உங்களைக் கேட்கின்றோம்.

## அப்படியென்றால்

மைத்திரியின் ஆட்சியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு வருமா?

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகள் கிட்டுமா?

எத்தகைய அரசியல் தீர்வு கிடைக்கும்?

அப்படியென்றால் அது எவ்வளவு கால எல்லையில் நடக்கும்?

இதற்கெல்லாம் மைத்திரியுடன் கூட்டு வைத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பி.யும் உடன்படுமா?

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்களா?

வடக்குக் கிழக்கிலிருந்து படையினர் விலக்கப்படுவார்களா?

படையினரின் பயன்பாட்டிலிருக்கும் காணிகள் விடுவிக்கப்படுமா?

உயர் பாதுகாப்பு வலயங்கள் முற்றாகவே நீக்கப்படுமா?

மாகாண சபைகளுக்கான அதிகாரம் எதிர்பார்ப்பதைப்போல முழுமையாக வழங்கப்படுமா?

ஆளுநர்கள் மாற்றப்படுவார்களா?

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட நிவாரணம் கிடைக்குமா?

போர்க்காலத்தில் பாதிக்கப்பட்டு மாற்றுவலுவுடையோராக உள்ளவர்களுக்கான உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா?

## குறிப்பு

1. இந்தக் கேள்விகளுக்கான பதிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்லப் போவதில்லை.

ஆனால், படித்தவர்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நம்புகின்றவர்களும் இதற்கான பதில்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

2. இந்தக் கேள்விகளுக்கான பதிலை மைத்திரியிடம் கேட்காமல் எப்படி மைத்திரிக்கு ஆதரவளிப்பதற்கு சம்பந்தன் துணிந்தார்?

3. ஜாதிக ஹெல உறுமயவுடன் உடன்படிக்கை செய்த மைத்திரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடும் முஸ்லிம் தரப்புகளோடும் உடன்படிக்கை செய்யாமல் விட்டது ஏன்?

4. உடன்படிக்கையோ, வாக்குறுதியோ இல்லாமல் எதற்காக இவ்வளவு அந்தரப்படுகிறார் சம்பந்தன்?

## அபிப்பிராயம்

எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு தரப்புக்கு வாக்களிக்கும்படியும் ஒரு தரப்பை ஆதரிக்கும்படியும் மக்களை கேட்கின்ற கூட்டமைப்பு சொந்த மக்களை அடகு வைக்கிறது. இதைத் தமிழ் மக்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

- ம.அய்யம்பிள்ளை -

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது.

காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முட்டாள்தன அரசியலும் நாமும்!

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்களது வாக்குகளைப் போடும்படியும் வீடு வீடாகச் சென்று அவரது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்யும்படியும கூறியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இப்போது மைத்திரியுடன் நிற்பவர்களான சந்திரிகாவும் ரணிலும் ஆட்சியிலிருந்தபோது அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபடியும், சந்திரிகாவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காக ரணிலை ஆதரித்தும், பிறகு ரணிலை அகற்றுவதற்காக மகிந்தவின் வெற்றிக்கு ஆதரவு செய்ததும் இவர்களது கடந்தகால வரலாறு.

அதுபோல, மைத்திரி ஒருவேளை பதவிக்கு வந்தாலும், அதன பிறகு அவரையும் எதிர்த்துக்கொண்டு அடுத்த தேர்தலில் திரும்பவும் மகிந்தவுக்கே வாக்குப்போடச் சொல்வார்கள் என்பதான இநதத் தமிழரசுக்கட்சித் தந்திர அரசியல் இப்போது சிறுகுழந்தைகளுக்கும் விளங்கியிருக்கக்கூடிய ஒன்றுதான்.

தமிழர்களின் தீர்வுக்காகவே பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் இந்தத் தமிழ்க் கூட்டமைப்பினர், தீர்வுக்கு இணக்கம் இல்லாத ஒரு தலைமையே தெற்கில் இருந்துகொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படியென்றால்தான் அவர்களது தேரதல் வெற்றிகளுக்கான உணர்ச்சிகரச் சூழலை இங்கு வைத்திருக்க முடியும் என்று செயற்படுகிறார்கள்.

இல்லாவிட்டால், "சமஷ்டித் தீர்வுக்கு ஒருபோதும் உடன்பட மாட்டேன்; வடக்கிலிருந்து படையினரை மீளப் பெறமாட்டேன்" என்றெல்லாம் வெளிப்படையாகவே அறிவித்திருக்கும் மைத்திரியை வெல்ல வைப்பதற்கு முயல்வார்களா?

மகிந்த ஜனாதிபதியாக வந்துவிட்டால் இம்முறை இனப்பிரச்சினைத் தீர்வையும் தான் சாதித்தேன் என்று காட்டிவிடுவதற்கு அவர முயலக் கூடும். ஆனால், மைத்திரி வந்தால் தீர்வைப் பற்றி பேச்சே எடுக்க மாட்டார்; அப்படி எடுப்பதற்கு சம்பிக்கவும், சஜித்தும், பொனசேகாவும் ஒருபோதும் விடமாட்டார்கள் என்று தெரிந்தே அவரை வெல்லவைக்கப் பாடுபடுகிறார்கள்.

தமிழ் ஊடகங்களும் புத்திஜீவிகளும் தமிழர்க்கான குரல்களாக ஒலிப்பவர்களும் தமிழினவாதச் சிந்தனையிலேயே ஊறியவர்களாக, சிங்களப் பெரும்பான்மை மக்களின் தலைவராக வருபவரை எதிர்ப்பதொன்றையே தங்களது தமிழ்த் தேசியக் கடமையாக ஆற்றிவருகின்றார்கள்.

இவர்களும் மைத்திரி ஒருவேளை ஜனாதிபதியாக வந்துவிட்டால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை ஆதரித்து எழுதுவதை கூச்சப்படாமல் செய்யக்கூடியவர்கள்தான்.

இல்லாவிட்டால் சந்திரிகாவை ராட்சசியாக வர்ணித்து எழுதியும் கார்ட்டூன்கள் வரைந்தும் திட்டித் தீர்த்தவர்கள் இப்போது அவரை ஜனநாயகத்தை மீள்விக்கும் காவலராக வர்ணிக்க முடிவது எப்படி? அதுபோல்தான் ரணிலையும் பொன்சேகாவையும் மைத்திரியைய்யும்....

ஊடகங்களைப் பாருங்கள்! "அவசிய பாதுகாப்புத் தேவைக்கு தவிர ஏனைய நிலங்களை விடுவிப்போம்–யாழ்ப்பாணத்தில் சநதிரிகா தெரிவிப்பு" என்று கொட்டை எழுத்தில் தலைப்புச்செய்தி போடுகிறது ஒரு பத்திரிகை.

மற்றொரு பத்திரிகையோ அதைவிட விசுவாசமாக "பறிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்படும்" என்று மகா கொட்டை எழுத்தில் போடுகிறது.

இவ்வளவுக்கும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களுடனான இரகசியச் சந்திப்பில் சந்திரிகா இதைச் சொன்னபோது, "உதைத் தானே கோத்தாபயவும் சொல்கிறார்" என்று சந்திரிகாவிடமே ஒரு கட்சித் தலைவர் கேட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதாவது, இராணுவத் தேவைக்குப் போக மிச்சக் காணிகளை விடுவிப்பதாகத்தான் சந்திரிகா குழுவினரும் சொல்கிறார்கள். இதையே மக்களுக்குத் திரித்துப் படங்காட்டிவிட்டு, காணிகள் கிடைக்கும் வாக்குகளைப் போடுங்கள் என்கின்றன தமிழ்க் கூட்டமைப்பின் ஊதுகுழல்கள்.

என்னவொரு முட்டாள்தன அரசியலுக்குள் நாம் மூழ்கிக் கொணடிருக்கிறோம்?

- ஆசிரியர்

# வேடிக்கையாச்சு 2015 இல் தீர்வாம்!

அன்பான மக்களுக்கு அன்று ஆவேசத்துடன் அரங்கமே அதிருமளவிற்கு அண்ணன் மாவை அவர்கள் முழங்கித்தள்ளிய அகிம்சை எனும் பேச்சு அத்தனையும் இன்று பொய்யாய் போச்சு.

ஏன்?... எதற்காக?... எதை எதிர்பார்த்து அதை நிறுத்தினீர்கள்?.... உசுப்பேத்தும் உணர்வோடு உச்சரித்த உங்கள் குரல்வளை இன்று ஏன் மௌனித்து விட்டது? நிறுத்திய உங்களுக்கு அதை நியாயப்படுத்த தமிழில் வார்த்தையில்லையா? எதிர்பார்த்த மக்களுக்கு ஏன் நிறுத்தினோம் என்றேனும் கூறமாட்டீர்களா?....

- **ஆயுத பலத்தை நம்பினோம் அழிவுதான் மிச்சமாச்சு**
- **சர்வதேசத்தை நம்பினோம் சாக்கடைதான் தஞ்சமாச்சு**
- **ஜெனிவாவை நம்பினோம் ஜெயிச்சது அரசாய்ப்போச்சு**
- **நவநீதம் பிள்ளையை நம்பினோம் நாளடைவில் எல்லாம் போச்சு**

இனி வேறு வழியில்லை எவரை நம்பியும் எவரிடமிருந்தும் தீர்வைப் பெற முடியாது எனும் கட்டத்தில்.... எமது உரிமைகளை நாமே வென்றெடுக்கும் அகிம்சை வழிப் போரில் குதித்தாக வேண்டும். அகிம்சைப் போராட்டம் எப்போதும் தோற்றுப் போனதில்லை.... எமது உரிமைப் போரிது. இதில் எவரும் பின்வாங்கக்கூடாது.... அரசுக்கு 100 நாள் அவகாசம் கொடுத்து எமது அகிம்சைப் போரை ஆரம்பிப்போம்.... என்றெல்லாம் கூறிய தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் காலக்கெடு, முடிவடைந்தும் கூட அப்பாவித் தமிழ்மக்கள் எதிர்பார்த்த அகிம்சைப்போர் அரங்கேறவில்லை.

மறுபுறத்தில் வேறொரு அணுகுண்டுக்கு மீண்டும் இலக்காகின்றனர். அப்பாவித் தமிழ்மக்கள். அது என்னவெனில் 2015இல் தமிழருக்கு தீர்வு நிச்சயமாம். ஆகையால் இது தொடர்பாக தமிழ் மக்களாகிய நமக்கு எழும் ஐயப்பாடுகளை சற்று அலசுவோம்.

1. 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் "இலங்கையில் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திர, இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சோஷலிசத் தமிழீழ நாட்டை மீள்விக்க வேண்டுமென பிரகடனம் செய்தது" இதைக் காக்கவே அகிம்சையென்று புறப்பட்டோம். அதை நிறுத்திவிட்டு தற்போது பொது எதிரணி வேட்பாளரான மைத்திரிக்குப் பிரசாரம் செய்கின்றீர்களென்றால் அவ்வாறான ஓர் தமிழீழ நாட்டைத் தருவதாக அவர் உறுதியளித்தாரா?

2. "ஏன் மைத்திரியை ஆதரிக்கின்றோம்" என காரணம் சொல்லும் கூட்டமைப்பின் அறிக்கையில் மகிந்த அரசிடமிருந்து தமிழர்கள்


"சாத்வீகப் போராட்டத்தின் மூலம் தமிழருக்கு நாம் விடிவைப் பெற்றுக்கொடுப்போம்"
Tuesday Yarl Thinakkural 09 September 2014 13
சர்வதேச ஒத்துழைப்புடன் அகிம்சை வழிப் போராட்டம்
முன்னெடுப்போம் என மாவை முழக்கம்
மாவையால் முடியுமா?
வெள்ளிக்கிழமை (19.09.2014) பக்கங்கள் 20
இலக்கை நோக்கி நகரும்வரை தமிழர்கள் தூங்கிவிடக்கூடாது
அறிவுரை சொல்கிறார் மாவை

# வெடிக்குமென்ற அகிம்சைப்போர்! மீண்டும் ஓர் அணுகுண்டு!



பெறமுடியாதெனக் கூறும் அத்தனையையும் மைத்திரி அரசிடமிருந்து உங்களால் பெற்றெடுக்க முடியுமா?

3. அப்படியானால் தமிழர்களின் வாழ்வுரிமை தெடர்பான எத்தகைய உத்தரவாதத்தை மைத்திரியின் பொது எதிரணியிடம் பெற்று மக்களின் வாக்குகளைப் பணயம் வைக்கின்றீர்கள்?.... ஏன் அதை நீங்கள் பகிரங்கப்படுத்தவில்லை?

4. தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை அடிப்படையில் சமஸ்டித் தீர்வு ஒன்றைத்தான் கூட்டமைப்பு கோரி நிற்கின்றது என்கின்றீர்கள். தற்போது தமிழ் மக்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கு நான் ஒரு போதும் அனும்திக்க மாட்டேன் எனக்கூறி, உத்தரவாதம் கொடுத்து இனவாதக் கூட்டணிகளை ஒன்று திரட்டிய மைத்திரியை நீங்கள் ஆதரிக்கின்றீர்கள் என்றால் நீங்களும் தமிழரின் தன்னாட்சி உரிமை பெற்ற சமஷ்டித் தீர்வைக் கைவிட்டு விட்டீர்களா?

5. தமிழர் தீர்வு தொடர்பாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிங்கள மக்களுக்குப் பயந்து எதுவும் பேசாத மைத்திரியை ஆதரிக்கும்படி எப்படி நீங்கள் தமிழ் மக்களைக் கேட்க முடியும்?

6. தேர்தல் வெற்றிக்காகவே அது இரகசிய உடன்படிக்கையாக இருக்கின்றதா? அவ்வாறானால் மைத்திரி சிங்கள மக்களைப் பின்பு ஏமாற்றுவாரா? அவ்வாறானவர் உங்களை ஏமாற்றமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

7. இதற்கெல்லாம் அப்பால் நீங்கள் மக்களாகிய எங்கள்ை ஏமாற்றமாட் டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

**※ அன்று தமிழீழம் என்று அப்பாவிப் பிஞ்சுகளைச் சாகடித்தீர்கள்.**

**※ பின்பு சமஷ்டியென்றீர்கள்.**

**※ எரிக் சொல்ஹெம் எக்காள மிடுகின்றார் என்றீர்கள்.**

**※ ஜெனீவாவில் முன்வைத்த பிரேரணை மூலம் சர்வதேசம் கொண்டுவரும் எங்களுக்கான தீர்வை என்றீர்கள்.**

**※ பின்பு நவநீதம்பிள்ளை நாணமிடுவார் என்றீர்கள்.**

**※ மோடி வந்தபின் தமிழர்க்கு மோதகம் தருவார் என்றீர்கள்.**

**※ மாகாணசபை மூலம் தன்னாட்சி அதிகாரத்தை வென்றெடுக்கமுடியும் என்று மயங்கி விழுந்து விழுந்து பிரசாரம் செய்தீர்கள்.**

**※ மாகாணசபை கிடைத்த பின்பு மலர்ந்தது தமிழரசு என்று கூட மார்பு தட்டினீர்கள்.**

**※ தென்னாபிரிக்கா மத்தியஸ்தம் மகிமை மிக்கது என்றீர்கள்.**

**※ இறுதியில் அகிம்சையைத் தவிர தமிழர்க்கு வேறு வழியில்லையென்றீர்கள்.**

**※ இன்று மைத்திரி தலைமையில் 2015-இல் தீர்வு என்கின்றீர்கள்**

**※ நாளை.?.........?.......**

8. அன்று மகிந்தா ஆட்சிக்கு வரும்போது யதார்த்த அரசியல்வாதி யென்றீர்கள்.....

9. ரணில் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காக தேர்தலைக்கூடப் பகிஷ்கரிக்குமாறு மக்ளைக் கோரினீர்கள். தற்போது அந்த ரணில் யாரோடு?.......

10. 2011இலேயே கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்களியுங்கள், வந்திறங்கும் சர்வதேசமென்றீர்கள் எங்கே அந்த சர்வதேசம்?.......

**உதிரங்கள் சிந்தி உயிரிழந்த அந்த உறவுகளுக்கேனும் மதிப்பளியுங்கள். இனி எமது சந்ததியேனும் வாழவேண்டும். வழி விடுங்கள் சற்று விழிதிறந்து. பொய்மைக்குள் பொழுதைப் போக்கியது போதும். விடிவைத் தேடிக் கொடுங்கள். இல்லையேல் விலகி வழி விடுங்கள்.**

வெண்கட்டியன்



உதயன்

வன்னி

பக்கம் 18

சுடர்: 29 கதிர்: 297 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 3, வியாழன் 19.09.2014

stay connected with uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

## தோற்றுப் போனவரல்லர் நாங்கள் அஹிம்சை வழியில் போராடுவோம்

### தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா அழைப்பு

வலி.வடக்கு, செப்.19

"நாம் தோற்றுப் போனவர்கள் அல்ல. அத னாலேயே நாம் இன்று அஹிம்சை வழியிலான போராட்டத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோம். அஹிம்சைப் போராட்டம் என்றும் தோற்றுப் ...தாக சரித்திரம் இல்லை."- இவ்வாறு ...தார் தமிழரசுக் கட்சியின் புதிய தலை ...ப்பட்டுள்ள மாவை.

என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக் மாவை.சேனாதிராசா தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து, காங்கேசன்துறை தமிழரசுக் கட்சிக் கிளையால் அவருக்கு வரவேற்பு அளிக்கப் பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கு...

...ாக இருக்கவில்லை. ஆனால் ...ஏற்றுள்ளேன்.

தையும் சுமப்பேன் என்று கூறவில்லை. நீங்களும் என்னுடன் சேர்ந்து சுமக்க வேண் டும்"- என்றும் அவர் மேலும் அங்கு குறிப்பிட் டுள்ளார்.

"நாங்கள் யாரும் தூங்கிவிடக் கூடாது. எமக்கு இலக்கை நோக்கி நகர வேண்டியது அத்தியா வசியமானதாகும். சில நாள்களுக்கு முன் னர், ஒரு நாட்டின் தூதுவர் என்னுடன் பேசினார். உள்நாட்டுப் பிரச்சினையில் அவர் கள் தலையிடுவதை அரசு விரும்பவில்லை என்று கூறினார். துன்பத்தை எந்தளவுக்கு ...தவன் தா... ...ா அவனே ...விடுத

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வட்டியில்லா கடன்

## இடர்முகாமைத்துவ அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச வங்கிகள் ஊடாக 50 ஆயிரம் ரூபா வரை வட்டியற்ற கடன் தொகை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இடர்முகாமைத்தவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளர்.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் நாட்டின் 16 மாவட்டங்களில் நிலவிய கடும் மழையுடன் கூடிய வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் 35 பேர் உயிரிழந்ததாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்தும் முகாம்களில் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகளை அதிகரிப்பதறகு நடவடிக்கை எடுத்துள்ளதாக இடர்முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்துளளது.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச வங்கிகள் ஊடாக 50 ஆயிரம் ரூபா வரை வட்டியற்ற கடன் தொகையை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாட்டின் சில மாவட்டங்களில் நிலவிய மழையுடன் கூடிய வானிலை படிப படியாக வழமைக்குத் திரும்பும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மன்னாரிலிருந்து காங்கேசன் துறை ஊடாக திருகோணமலை வரையுள்ள கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

# 1937 பேர் கடந்த வருடத்தில் விபத்தால் உயிரிழப்பு

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி வரை இடம்பெற்ற 1,814 பாரிய விபத்துக்களில் 1,937 பேர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதில் 295 பெண்களும் 1,642 ஆண்களும் அடங்குகின்றனர் என்று அவர் தெரிவித்தார். இவ்விபத்துக்களில் அதிகமானவை மேல் மற்றும் தென் மாகாணங்களிலேயே இடம்பெற்றுள்ளன.

இவ்வாறாக ஏற்படும் விபத்துக்கள், சாரதிகள் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம் காரணமாகவே இடம்பெறுகின்றன. விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்காக, மது அருந்துதல, வேகத்தைக் குறைத்து வாகனம செலுத்துதல்; வாகன இருக்கை பட்டியை அணிதல் போன்ற பல்வேறு சட்டதிட்டங்களை நாம் அமுல்படுத்தினாலும் எவரும் அதனைக் கடைப்பிடிப்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், கடந்த வருடத்தை விடவும் அதற்கு முந்திய வருடம் இடம் பெற்ற வாகன விபத்துக்களும் அதனால் இறந்தவர்களினதும் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பிள்ளைகளின் பாதுகாப்பு இந்தவருடமும் முக்கியத்துவம்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தகவல்

(கொழும்பு)

கடந்த வருடங்களை போன்று இந்த வருடமும் பிள்ளைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட வேண்டுமென சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு புதுவருடத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சிறுவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமான எதிர்காலமாக அமைக்கும் பொறுப்பு பெற்றோரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை பெற்றோர் நன்கு[illegible] வேண்டும்.

பாலியல் துஷ்பிரயோகம் உட்பட அனைத்து வன்முறைகளிலிருந்தும் பிள்ளைகளை பாதுகாக்கவும் வெற்றிப்பாதையில் அவர்கள் பயணம் செய்யவும் பெற்றோர் அவர்களை வழிநடத்த வேண்டும் எனவும் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதி அமைச்சர் முஸ்தபா மைத்திரிபாலவுக்கு ஆதரவு

(கொழும்பு)

முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளார்.



கொழும்பு விகாரமகாதேவி பூங்கா பகுதியில் இடம்பெற்று வரும் தேர்தல் பிரசார கூட்ட மேடையில் பைஸர் முஸ்தபா அமர்ந்துள்ளதுடன், அவர் தனது பரதி அமைச்சு பதவியையும் இராஜினாமா செய்துள்ளார்.

பைஸர் முஸ்தபா மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு அளித்து இந்த மேடையில் ஏறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றிய அவர் பொதுபல சேனா அமைப்பு மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு அளித்தால் தான் அரசாங்கத்தில் இருக்கப் போவதில்லை என அறிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பில் ஊடக சந்திப்பு நடத்திய பொது பலசேனா ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு அளிக்கப்படும் என அறிவித்தது.

இதனையடுத்து பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா திடீரென வெளிநாடு சென்றார். நாடு திரும்பியதும் தனது முடிவு அறிவிக்கப்படும் என கூறிய பைஸர் முஸ்தபா, இன்று மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளார்.

# முகப்புத்தகம் குறித்த முறைப்பாடுகள் கடந்த வருடத்தில் 2250 பதிவு

(கொழும்பு)

2014ஆம் ஆண்டில் முகப்புத்தக வலைத்தளம் தொடர்பில் 2250 முறைப்பாடுகள் பதிவான தாக இலங்கை கணனி அவசர அழைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.


போலி முகப்புத்தக கணக்குகள் தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கணனி அவசர அழைப்பு பிரிவின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகளின் பின் பல போலி கணக்குகள் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மேலும் கடந்த வருடத்தில் இணையம் தொடர்பில் 70 முறைப்பாடுகள் பதிவானதாக அவர் கூறினார்.

மின்னஞ்சல் மூலம் நிதி மோசடி செய்வது தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்ததாக ரொஷான் சந்திரகுப்த குறிப்பிட்டார்.

# மூன்று பிரதான தேர்தல்கள் 2015 இல் நடாத்த தீர்மானம்

2015ஆம் ஆண்டில மூன்று தேசிய ரீதியான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



எதிர்வரும் 8ஆம் திகதி மிகவும தீர்மானம் மிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கு மேலதிகமாக இரண்டு தேசிய ரீதியான தேர்தல்கள் இந்த ஆண்டில் நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலும், சர்வஜன வாக்கெடுப்பும் இந்த ஆண்டில் நடத்தப்பட உள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் நிறைவின் பின்னர் விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இந்த ஆண்டு இறுதிப் பகுதியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்யும் நோக்கில் இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாக அரசியல் வட்டாரத் தகவ்ல்கள் தெரிவிக்கின்றன.

# கொழும்பில் டெங்குத்தாக்கம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவி வருவதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

மட்டக்குளி, முகத்துவாரம், கறுவாத்தோட்டம், கிருலப்பனை, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வீட்டுத் தோட்டங்களை சுத்தமாக வைத்துக்கொள்வ தன் மூலம் டெங்கு நுளம்பு பெருகுவதை குறைத்துக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மழையுடன் கூடிய வானிலையால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளார்.

நுளம்புப் பெருக்கம் அபாயம் அதிகரித்து காணப்படும் பகுதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# தேர்தல் குறித்து கலந்துரையாடல்

(கொழும்பு)

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேர்தலில் போட்டியிடவுள்ள சகல அபேட்சகர்களினதும் செயலாளர்கள் தேர்தல்கள் ஆணையாளரினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது 8 மாவட்டங்களில வெள்ளம் மற்றும் மண் சரிவு என்பன இடம்பெறுவதற்கான அச்சம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைத்தல், வாக்காளர் அட்டை வநியோகம், வாக்காளர்களை வாககளிப்பு நிலையத்துக்கு அழைத்துச் செல்லல், வாக்கு எண்ணும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்ற பல்வேறு விடயங்களில் பிரச்சினைகள் உள்ளன.

இந்த விடயங்கள் குறித்து இன்று தேர்தல்கள் ஆணையாளர் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


# துப்பாக்கி காட்டி மிரட்டிய சந்தேக நபர் கைது

புதுவருடம் பிறக்கும் வேளையில் வீடு ஒன்றுக்குள் சென்று துப்பாக்கியை காட்டி வீட்டு உரிமையாளரை மிரட்டிய சந்தேகநபர் ஒருவர் மாரவில சிங்கப்புர பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.




சந்தேகநபர் நேற்று அதிகாலை வீட்டு உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்த துப்பாக்கியை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

நான் சொல்வதெல்லாம் உண்மை.
மாற்றம் செய்வதற்கு 100 நாட்கள் போதாது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை உட்பட அனைத்தையும் மாற்றுவதற்கு எனக்கு 115 நாட்கள் வேண்டும்.



ஆபிரிக்காவிற்கு காந்தி



இந்தியாவிற்கு மண்டேலா



இலங்கைக்கு

**ஆர். ஏ. சிறிசேன**

X

பகைமையை தோற்கடிக்க
என்னுடன் ஒன்றுசேருங்கள்

(C/3976)

# 19 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய குழாமில் சென். ஜோண்ஸின் இரு வீரர்கள் இணைப்பு

(கொழும்பு)

இலங்கை, பங்களாதேஷ் அணிகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் இம்மாதம் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடருக்கான 31 பேர் கொண்ட இலங்கையின் முன்னோடி கிரிக்கெட் குழாமில் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த இரு வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன.

இப்போட்டிக்கான முன்னோடி அணியை இலங்கை கனிஷ்ட, தேசிய தெரிவாளர்களினால் நேற்று முன்தினம் பெயரிடப்பட்டுள்ளது. இதில் வடபகுதியைச் சேர்ந்த இரண்டு கிரிக்கெட் வீரர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

யாழ். சென்.ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பரமானந்தம் துவாரகசீலன், செபமாலைப்பிள்ளை ப்ளெமின் ஆகிய இருவருரே வட பகுதியிலிருந்து 19 வயதுக்குட்பட்ட இலங்கை குழாமில் இடம்பிடித்துள்ளவர்களாவர்.


வட பகுதியிலிருந்து கிரிக்கெட் வீரர்களை தேசிய அணியில் விளையாட வைப்பதற்கான முயற்சிகளை இலங்கை கிரிக்கெட் சபை எடுத்துவரும் நிலையில். அப்பகுதியிலிருந்து இரண்டு வீரர்களுக்கு முன்னோடி குழாமில் இடம்பெற வாய்ப்பு கிட்டியுள்ளமை சிறப்பானதாகும் என இலங்கை கிரிக்கெட் சபையின் ஊடகப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சகலதுறை வீரரான துவாரகசீலன், 17 வயதுக்குட்பட்ட இலங்கை முன்னோடிகுழாமில் இடம்பெற்றதுடன் கடந்த வருடம் இங்கிலாந்துக்கு கிரிக்கெட் விஜயம் செய்த முரளி நல்லிணக்க கூட்டு அணியின் உதவித் தலைவராக விளையாடியிருந்தார்.


ப்ளெமின் 3ஆம் இலக்க இடது கை துடுப்பாட்ட வீரராவார். இவர் நடப்பு பருவகாலத்தில் நான்கு போட்டிகளில் மாத்திரமே விளையாடி ஒரு சதம், ஒரு அரைச்சதம் பெற்றுள்ளார். பொதுத் தராதர பரீட்சை காரணமாக சில போட்டிகளில் அவர் விளையாடவில்லை.

இதேவேளை 19 வயதுக்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக காலி றிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சரித் அசலன்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் குழாமில் இடம்பெறும் ஏனைய வீரர்கள் விபரம்: கவீன் பண்டார, அக்கில் இன்ஹாம் (இருவரும் டி.எஸ்.எஸ்.), அவிஷ்க பெர்னாண்டோ, குசல் லக்சித்த (இருவரும் மொறட்டுவை புனித செபஸ்தியார்), அசித்த பெர்னாண்டோ (கட்டுநேரிய புனித செபஸ்தியார்). சஹான் ஆரச்சிகே, ஷம்மு ஆஷான் (இருவரும் ஆனந்த), லசித் லக்ஷான் (மாத்தறை புனித தோமஸ்), சேனுத்த விக்ரமசிங்க (கல்கிசை புனித தோமஸ்), ஷலிந்து உஷான், விஷார்ட் ரந்திக்க (இருவரும் இஸிபத்தன), வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ் (இருவரும் றிச்மண்ட்), தேனுக்க தாபரே (லும்பிணி), ரமேஷ் நிஷான்த (மாத்தறை புனித செர்வேஷஸ்), அரவிந்த அத்துகோரள (புனித சூசையப்பர்), ரவிந்து திலக்கரட்ன (என்.சி.சி.), தமித் சில்வா, கேஷான் விஜேரட்ன (இருவரும் மலியதேவ), நிஷான் பீரிஸ் (புனித பேதுரு), துவிந்து திலக்கரட்ன, லஹிரு குமார, நுஷான் வீரசிங்க (மூவரும் திரித்துவம்), சாமிக்க கருணராட்ன, ஹிமேஷ் ராமநாயக்க (இருவரும் றோயல்), திலான் நிமேஷ் (பிறின்ஸ் ஒவ் வேல்ஸ்), பசிந்து இசிர (விமானப்படை).



துவாரகசீலன்



ப்ளமிங்

## விளையாட்டு செய்திகள்

### நாளை 2ஆவது டெஸ்ட்

(வெலிங்டன்)

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் நாளை நியூசிலாந்தின் வெலிங்டனில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில் இப்போட்டியை வென்று தொடரை சமப்படுத்த முயற்சிப்போம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் சுழற்பந்து வீச்சாளர் ஹேரத் இப்போட்டியில் களமிறங்கவுள்ளதால் அணிக்கு அது கூடுதல் பலம் எனவும், பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டபோதிலும் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பியதே முதல் போட்டியில் தோல்வியைத் தழுவக் காரணம் எனவும் மத்தியூஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நியூசிலாந்துக்கு எதிரான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் மோதவுள்ள இலங்கை அணியில் வேகப்பந்து வீச்சாளர்களான மலிங்க, குலசேகர ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் இங்கிலாந்திற்கு எதிரான ஒருநாள் போட்டிகளின் போது நுவான் குலசேகர இலங்கை அணியிலிருந்து கழற்றிவிடப்பட்டார்.

இந்நிலையில் இம் மாதம் நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க நுவான் குலசேகரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் காயம் காரணமாக சிகிச்சை பெற்று ஓய்விலிருந்த மலிங்கவும் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளதாக இலங்கை அணியின் பயிற்சியாளர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார். இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஒருநாள் போட்டிகள் இம் மாதம் 11 ஆம் திகதி கிறைஸ்ட்சேர்சில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் அணி விபரம்: மத்தியூஸ் (கப்டன்), டில்சான், கருணாரட்ன, சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, திரிமன்னே, டினேஷ் சண்டிமல், ஜீவன் மெண்டிஸ், திசர பெரேரா, சுரங்க லக்மல், லசித் மலிங்க, தமிக்க பிரசாத், குலசேகர, ரங்கண ஹேரத், சசித்தா சேனாநாயக்க, சமிந்த எரங்க.

# ஹஸிக்கு டோனி ஆதரவு

இந்திய அணியின் அடுத்த பயிற்சியாளர் பதவிக்கு அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹசி தகுதியானவர் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.


இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பிளேட்சர் பதவி காலம் உலக கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரை வரை இருக்கிறது. அதன் பின் இந்திய அணி புதிய பயிற்சியாளரை நியமிக்கவுள்ளது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் மைக் ஹஸியை பயிற்சியாளராக நியமிக்க டோனி ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

இதேவேளை, சுரேஷ் ரெய்னா, ரோகித் சர்மா ஆகியோரும் மைக்கல் ஹஸி இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்படவேண்டும் என விரும்பம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ரெய்னா குறிப்பிடுகையில், ஹஸி சிறந்த வீரர். ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக அவர் விளையாடிய காலத்தில் அவருடன் நான் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருக்கு இந்திய அணியின் பயிற்சியாளர் பதவி வழங்கப்பட்டால் திறமையாகச் செயற்படுவர் என நம்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் மைக் ஹஸ்சி விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, பயிற்சியாளர் தேர்வு குறித்து இந்திய கிரிக்கெட் சபை இது வரை எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# சாதனையை முறியடிக்க ஹோலிக்கு வாய்ப்பு

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக ஒரு தொடரில் அதிக ஓட்டங்களைப் பெற்ற இந்திய வீரர்களில் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் முதலிடத்தில் இருக்கிறார். 2003-04 ஆண்டு நடைபெற்ற அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான தொடரில் ராவிட் 619 ஓட்டங்கள் குவித்தார். அவரின் சாதனையை முறியடிக்க இந்திய அணியின் புதிய கப்டன் ஹோலிக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இதுவரை ஹோலி மூன்று சதம், ஒரு அரைச்சதம் அடங்கலாக 499 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இன்னும் ஒரு டெஸ்ட் போட்டி எஞ்சி இருக்கிறது.

ராகுல் ராவிட்டின் இந்தச் சாதனையை முறியடிக்க ஹோலிக்கு இன்னும் 121 ஓட்டங்களே தேவை. இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் அவர் ராவிட் சாதனையை முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான ஒரு தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் 2ஆவது இடத்தில் விஸ்வநாத் குண்டப்பா (518 ஓட்டங்கள்), 3ஆவது இடத்தில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் (503) உள்ளனர்.

# டோனியின் திடீர் ஓய்வு; பின்னணியில் ஹோலி, சாஸ்திரி

(சிட்னி)

டெஸ்ட் போட்டிகளிலிருந்து டோனி திடீரென ஓய்வு பெற்றதற்கு, ஹோலி-ரவி சாஸ்திரி கூட்டணியே காரணம் என கூறப்படுகிறது. இவர்களது ஆதிக்கம் அதிகரிக்க, டோனி ஓரங்கட்டப்பட்டுள்ளார். வேறுவழியின்றி அவுஸ்ரேலிய தொடரின் பாதியில் ஓய்வை அறிவித்து அதிர்ச்சி தந்துள்ளார்.


இந்திய அணிக்கு இரண்டு உலக கிண்ணத்தைப் பெற்று கொடுத்த பெருமைமிக்கவர் டோனி. டெஸ்டில் மட்டும் சறுக்கினார். அதிலும் அந்நிய மண்ணில் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தார். தற்போதைய அவுஸ்ரேலிய தொடரில் இவருக்கு ஹோலி கூடுதல் தொல்லை கொடுத்தார்.

அடிலெய்டில் நடைபெற்ற முதல் டெஸ்டில் காயம் காரணமாக டோனி பங்கேற்வில்லை. அப்போது அணிக்கு முதல் முறையாக தலைமை ஏற்ற ஹோலி, இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்தார். இது, இந்திய அணியின் இயக்குநரான முன்னாள் கப்டன் ரவி சாஸ்திரியை பெரிதும் கவர்ந்தது. தொடர்ந்து இவருக்கு ஆதரவு கொடுத்துள்ளார்.

பின் விரல் காயத்திலிருந்து மீண்ட டோனி, பிரிஸ்பேனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டிற்கு மீண்டும் கப்டன் பொறுப்பை ஏற்றார். இப்போட்டியின் பயிற்சியில் காயமடைந்த தவான் களமிறங்க மறுக்க, ஹோலி முன்னதாக களமிறக்கப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த ஹோலி, தவானுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு சர்ச்சை கிளப்பினார்.

தொடர்ந்து மெல்பேர்னில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்டிலும் ஹோலியின் ஆக்ரோஷம் நீடித்தது. அவுஸ்ரேலியாவின் ஜோன்சன், ஹடினுடன் வார்த்தை போரில் ஈடுபட்டார். கப்டன் போலவே செயற்பட்டார். இது களத்தில் அமைதியை விரும்பும் கப்டன் கூல் டோனிக்கு அதிருப்தியை கொடுத்தது. ஓட்ட மழை பொழிந்து சிறந்த ஆட்டத் திறனுடன் இருக்கும் ஹோலியை இவரால் கட்டுப்படுத்த இயலவில்லை. பயிற்சியாளர் பிளட்சரின் ஒத்துழைப்பு மட்டுமே இருந்துள்ளது. ஆனால், அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி, ஹோலிக்கு ஆதரவாக இருந்துள்ளார். அணித் தேர்வு உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளில் பிளட்சர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

தனக்கு ஒத்து வராத ரவி சாஸ்திரி-ஹோலி அரசியலை சமாளிப்பதை காட்டிலும் ஓய்வு பெறுவதே சிறந்தது என டோனி நினைத்துள்ளார். இந்த பனிப் போர் காரணமாக தான், டோனி ஓய்வு குறித்து ரவி சாஸ்திரி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.



தவிர, ஐ.பி.எல்., சூதாட்ட வழக்கில் டோனியின் பெயரும் உள்ளது. இதில், மேல் நீதிமன்றம் இன்னும் ஒரு மாத காலத்தில் தீர்ப்பு அளிக்க இருக்கிறது. இதனையும் மனதில் வைத்துத் தான் டெஸ்ட் அரங்கில் இருந்து டோனி விடைபெற்றதாக தெரிகிறது.



சாவகச்சேரி விளைவேலி மருதடி விநாயகர் ஆலய கஜமுகசூரசம்ஹார விழா அண்மையில் இடம்பெற்ற போது.... (படங்கள்: இ.இராஜகுமார்)

# வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

திணைக்களப் பணிப்பாளர் திருமதி நூளாயினி இன்பராஜ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சமூக சேவை அலுவலகங்களை சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர்கள், மாவட்ட அலுவலர்கள், அபிவிருத்தி மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் உட்படப் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன் கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர், அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இவ் வைபவம் நடைபெற்றது.

தினமும் மாற்றுத்திறனாளிகள், விதவைகள், முதியோர்கள் எனப் பல தரப்பட்டவர்களுக்குத் தமது அளப்பரிய சேவையை வழங்கி வரும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சகலரும் ஒன்று கூடிய இச்சந்திப்பில் அவர்களிடையே பல கருத்துப் பரிமாறல்கள் மேற்கொள்ளப்பட்டன. பல அலுவலர்கள் இனிமையான பாடல்களையும் பாடிக் கூடியிருந்தவர்களை மகிழ்வித்தனர்.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 70 உத்தியோகத்தர்கள் இவ்ஒன்று கூடலில் கலந்து கொண்டனர். (137)

# எந்த வேட்பாளரையும் ஆதரித்து பிரசாரம் செய்யமாட்டேன்

## வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள ஜனாதிபதித தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரித்து பிரசாரம் செய்யமாட்டேன் என வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



தமிழ் மண்ணில் இருந்து தமிழர்களின் உரிமைகளுக்காக நியாயமாகக் குரல் கொடுப்பவர்களைத் தவிர வேறு எவரையும் ஆதரித்து பிரசாரம் செய்வதில்லை என்பது தனது கொள்கை சார் முடிவு என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்கள் மண்ணின் வரலாறு, அதற்கு முன் கண்டிராத சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட யாழ் மக்களின் இடப்பெயர்வை எங்களுக்கு பரிசளித்தவர் சந்திரிக்கா. செம்மணிப்புதைகுழி உள்ளிட்ட பல பேரவலங்களுக்கு இவரது ஆட்சியில்தான் தமிழர்கள் முகம் கொடுத்தார்கள். தமிழர்களுக்கெதிரான போரில் 75% வெற்றி தன்னுடையது என்று அவரே உரிமை கோருகிறார். எங்கள் மக்கள் மீதான இன அழிப்பின் குறியீடாக நிற்கிற கொடூரமான முள்ளி வாய்க்கால் பேரவலத்தை எமக்கு வழங்கியது மகிந்த ஆட்சியே. இன்றும் இந்த அவலத்திலிருந்து மீண்டு எழாத நிலையில், உடலில் குண்டுச் சிதறல்களோடும் உளச் சிதைவுகளோடும் நடைப்பிணங்களாக வாழ்கின்றனர் எங்கள் மக்கள். இப்போரின் தளபதியாக முன் நின்று உழைத்து அழிவுகளையும் அவலங்களையும் தமிழர் குடிகளுக்கு வழங்கியவர் சரத் பொன்சேகா.

முள்ளிவாய்க்காலில் எங்கள் இனம் அழிக்கப்பட்ட போது கொழும்பில் பாற்சோறு அரசியலையும் பட்டாசு அரசியலையும் பங்கு போட்டவரே மைத்திரி பால சிறிசேன. இவர்கள் எவரையும் ஆதரித்து என்னால் பிரசாரம் செய்ய இயலாது. மரணித்த எங்களின் உறவுகளின் உணர்வுகளினை மிதித்த இவர்களுக்காக வாக்குக் கேட்க முடியாது. வாழ்த்துப்பா பாடவும் முடியாது. தமிழ் மண்ணில் இருந்து தமிழர்களின் உரிமைகளுக்காக நியாயமாக குரல் கொடுப்பவர்களைத் தவிர வேறு எவரையும் ஆதரித்து பிரசாரம் செய்வதில்லை என்பது தனது கொள்கைசார் முடிவு என அவர் மேலும் தெரிவித்தார்.

# பண்பாட்டு பெருவிழா



வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகமும் பிரதேச பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

சாகித்திய ரத்னா கவிஞர் நீர்வை இ.முருகையன் பெயரில் அமைந்த அரங்கில் இடம்பெற்ற இவ்விழாவிற்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமை வகித்தார்.

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களின் முன்னாள் அரச அதிபர் உடுவை எஸ். தில்லைநடராஜா, பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் உஷா சுபலிங்கம், வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பண்பாட்டுப் பேரவையின் உபதலைவர் நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள் ஆசியுரையையும் பேரவையின் உபசெயலர் விரிவுரையாளர் ச.லலீசன் கவிஞர் இ.முருகையன் அரங்கத் திறப்புரையையும் ஆற்றினர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் பிறந்த அல்லது வாழ்கின்ற 60 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதோடு அவர்களது விபரங்கள் அடங்கிய கலைஞர் மஞ்சரி என்ற நூலும் வெளியிட்டு வைககப்பட்டது. கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கலை ஆற்றுகைகளாக யாழ். பல்கலைக்கழக நடன விரிவுரையாளர் நீர்வேலியூர் க.சத்தியப்பிரியாவின் மாணவிகள் வழங்கிய நடனநிகழ்வு, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களின் வாள் நடனம், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் விரிவுரையாளர் சிவை.சுகனேசனின் நெறியாள்கையில் வழங்கிய வாத்திய பிருந்தா ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் விருந்தினராகப் பங்கேற்ற ஆக்க இலக்கிய கர்த்தா உடுவை. எஸ்.தில்லை நடராஜா பிரதேச பண்பாட்டுப் பேரவையினரால் கலைக்காவலன் என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கலாசார உத்தியோகத்தர் மிலாசினி றோகேசன் நன்றியுரை வழங்கினார்.(48)

# அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆளுனர ஏற்பாட்டில் சிரேஷ்ட பிரஜைகள் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது அதன் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஐ.ஜெகநாதன், உப தலைசர் திருமதி.சி.ரங்கராணி, செயலாளர் சி.பகவத்சிங்கம், உபசெயலாளர் க.வைத்தியநாதன், பொருளாளர் க.சின்னராசா. காப்பாளர் கோப்பாய் உதவி பிரதேச செயலர் ச.பிறேமினி, செயற்குழு உறுப்பினர்கள் இ.மயில்வாகனம், மா.தங்கத்துரை, ந.சோதிலிங்கம், சி.கிருஷ்ணானந்தன், தி.சற்குண சர்மா, கி.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வை வைபவரீதியாக ஆளுநர் சந்திரசிறி ஆரம்பித்து வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். (08)

# நூல் வெளியீட்டுவிழா

காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடான "சைவாலய பரார்த்த பூஜா விளக்கம்" நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழத்துச்சிதம்பர மகோற்சவகுரு சிவபிரம்மஸ்ரீ தியாக உமாசுதக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில்தேவஸ்தான பிரதமகுரு சிவபிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள் நூலை வெளியிட்டு வைத்து அடியார்களுக்குப் பிரதிகளை வழங்குவார்.

இந்நூல் மூலம் பெறப்படும் நிதி முழுவதும் திண்ணபுரம் சிவன்கோவில் ஈழத்துச்சிதம்பர நித்திய பூஜைக்கு வழங்கப்படுமென நூல் வெளியீட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (10)

# முன்பள்ளிக்கு குழாய்க் கிணறு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தமது 2014 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து புத்தூர் மேற்கு மாதர்சங்கத்தின் கீழ் இயங்கும் 'விடிவெள்ளி' முன்பள்ளிக்கு குழாய்க்கிணறு நீர்ப்பம்பி அமைக்க ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கியுள்ளார். (08)

# தமிழ் மக்களுக்கு ஊடகங்களாலும் உண்மைகள் மறைக்கப்படுகின்றன

**(அரசியல் ஆய்வாளரும் பத்தி எழுத்தாளருமான யதீந்திரா ஐ.பி.சி. தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலிருந்து....)**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் ஏற்கனவே எதிரணித் தலைவர்களைச் சந்தித்து தமிழ் வாக்குகளைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்து விட்டார் எனச் சொல்லப்படுகிறது. கூட்டமைப்பிற்குள் எந்தவித கலந்துரையாடலும் நிகழ்த்தாமல் சுமந்திரன் இந்த முடிவைத் தெரிவித்தது குறித்து கூட்டமைப்பின் ஏனைய கட்சித் தலைவர்களான சுரேஷ், சித்தார்த்தன், செல்வம் போன்றோர் அதிருப்தியில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த முடிவு என்பது உண்மையில் கூட்டமைப்பின் முடிவாக அல்லாமல் தமிழரசுக் கட்சியின் தனித்த முடிவாகவே பெருமளவுக்கு வெளித்தெரிகிறது.

சுமந்திரனுக்கு கூட்டமைப்பின் தொடர்பாடல்களை தனித்து மேற்கொள்வதற்கான இந்த அதிகாரம் கிடைத்தது சம்பந்தன் ஊடாகத்தான். சம்பந்தன் தன்னால் முன்னெடுக்கப்படுகின்ற விடயங்கள் அனைத்திற்கும் பக்க பலமாகவும் சுமந்திரனைத்தான் வைத்திருக்கின்றார்.

ஆகவே, இதனடிப்படையில்தான் சுமந்திரன் இந்த விடயத்தில் பிரதான ஒரு சக்தியாக மேலெழுந்திருக்கிறார். இதற்கு கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளில் இருப்போரும் ஒரு காரணம். அவர்கள் சுமந்திரனை இந்த விடயங்களில் சரியான தருணங்களில் அம்பலப்படுத்தி, அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளை காட்டாதது ஒரு காரணம்.

இப்பொழுதுகூட சுமந்திரன் தனியாக முடிவுகளை எடுத்துச் செயற்படுகின்றார் என குற்றஞ்சாட்டுகின்றார்களே தவிர, இவர்கள் (சுரேஸ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகிய) மூன்று பேரும் இணைந்து, உண்மையில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் எத்தகைய நிலைப்பாட்டை தமிழ் மக்கள் எடுக்கலாம். அல்லது தாம் ஒரு தலைமை என்ற வகையில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய சூழலுக்குள் நாம் இருக்கின்றோம் என்பதைக்கூட இவர்கள் சொல்லவில்லை.

ஆகவே, இந்த மூன்று பேரும் தேர்தலில் .மைத்திரிபாலவுக்கு பகிரங்க ஆதரவு வழங்குவதில் உள்ள சிக்கல்களை வெளிப்படையாக முன்வைக்க முடியாமல் தங்களுக்குள் குமைபவர்களாகவே இருக்கிறார்கள். உதாரணமாக மைத்திரிபால சொல்லியிருக்கிறார் சமஷ்டித் தீர்வை ஒருபோதும் தான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று. ஆனால் தமிழ்த் தரப்பினர் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த நாட்டில் சமஷ்டி வழியான ஒரு தீர்வையே வரலாற்று ரீதியாக முன்வைத்து வந்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான இந்த நிலைப்பாட்டை இன்றைக்கு அது பொருத்தமற்றது, அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மைத்திரிபால சொல்கிறார். இந்த நிலையில் தமிழ் மக்களை மைத்திரிபாலவுக்கு வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லுமாகவிருந்தால், அது சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு விட்டதாகச் சொல்லுவதாகவும், அதற்கு வாக்களித்தால் தமிழ் மக்களும் அதை ஏற்றுக் கொள்வதாகவும் அமையும்.


இப்படியான விடயங்களை மக்களுக்குச் சொல்வது யார்? மக்களுக்கு சொல்ல வேண்டிய பொறுப்பில் உள்ள ஊடகங்களும் இதனை வெளியில் சொல்லக்கூடாது, இதனை ஒலிபரப்பக்கூடாது என்று தடுத்து வைத்திருக்கிறது தமிழ்த் தேசிய அரசியல். இதுதான் இன்று உள்ள நிலைமை.

இன்றைக்கு தமிழ் மக்கள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அல்லது எடுக்கக்கூடாது என்கின்ற நிலைப்பாட்டை ஒருநிலைப்படுத்தி சொல்ல முடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கிறது. தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு என்பது கைநழுவுகின்ற நிலையில்[illegible] உள்ளது.

இரண்டு பிரதான வேட்பாளர்கள[illegible] ராஜபக்ஷ, மைத்திரிபால இருவரும் தமிழ் மக்களின் வாக்குகளை பிரதான

---

# கே.வி. மகாதேவன்



**47**

**- பி.ஜி.எஸ்.மணியன் -**

**1967**- ஜனவரி மாதம் - 13ஆம் திகதி - பொங்கல் பண்டிகைக்கு முதல் நாளன்று வெளியான படம் "தாய்க்குத் தலைமகன்".

எம்.ஜி.ஆரை வைத்து தேவர் தயாரித்த பன்னிரெண்டாவது படம்.

எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா வெற்றி ஜோடியோடு அசோகன், சௌகார் ஜானகி, ஆர்.எஸ். மனோகர், எஸ்.வி. ரங்கராவ், நாகேஷ் - மனோரமா ஆகியோரும் நடித்திருந்தனர்.

மகாதேவனின் இசையில் பாடல்கள் வழக்கமான எம்.ஜி.ஆர். படப் பாடல்களிலேயே சுமார் ரகத்தில் தான் அமைந்து விட்டிருந்தன.

என்றாலும் "பார்த்துக்கொண்டது கண்ணுக்கு கண்ணு" என்ற டி.எம்.எஸ். - பி.சுசீலாவின் டுயட் பாடலும், "அன்னை என்று ஆகுமுன்பே ஆராரோ பாடவந்தேன்" என்ற பி. சுசீலாவின் இனிய மெலோடியும் ஹிட் பாடல்களாயின.

"தாய்க்குத் தலைமகன்" படம் வெளியாவதற்கு முதல் நாள் - அதாவது ஜனவரி 12ஆம் திகதி நடைபெற்ற ஒரு சம்பவம் படவுலகை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் நாட்டையுமே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

"மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சுடப்பட்டார்."

சென்னை அரசினர் பொதுமருத்துவமனையில் பேராபத்தான நிலையில் எம்.ஜி.ஆர். அனுமதிக்கப்பட்டிருந்த நேரம்.

அந்த நேரத்தில் வெளியான "தாய்க்குத் தலைமகன்" படம் தாய்மார்களின் பேராதரவோடு வெற்றிப் படமாக எண்பது நாட்களைக் கடந்து விட்டிருந்தது.

"தொண்டைக் குழியிலே குண்டு பாய்ஞ்சிருக்கு... ஆள் பிழைக்கிறதே கஷ்டமாம்."

"அப்படியே மீண்டு வந்தாலும் அவராலே இனிமேல் முன்போல வசனம் எல்லாம் பேசி நடிக்க முடியாது"

"அவ்வளவுதான். அவர் கதை முடிஞ்சமாதிரிதான்."

வதந்திகள்! கற்பனைகள்! ஆளாளுக்கு காட்டுத்தீயாகப் பற்றவைத்துப் பரவிக்கொண்டிருந்தன.

பாதியில் நின்றுவிட்ட படங்களில் தயாரிப்பாளர்கள் கலங்கிப் போயிருந்தார்கள்.

புதிதாக அவரை ஒப்பந்தம் செய்யத் தயங்கினார்கள்.

ஆனால் - அந்தச் சூழலிலும் அசராமல் நம்பிக்கையோடு எம்.ஜி.ஆருக்கு ஒரு தூணாக நின்றவர் சாண்டோ சின்னப்பா தேவர் தான்.

எம்.ஜி.ஆர். படுத்த படுக்கையாக மருத்துவமனையில் இருந்த நேரத்தில், படுக்கையிலேயே வைத்து அட்வான்ஸ் கொடுத்தவர் தேவர் ஒருவர்தான்.

"விவசாயி" படத்தை எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயாவை நடிக்கவைத்து தயாரித்து 1967 தீபாவளிக்கு வெளியிட்டுக் காட்டினார் தேவர்.

பாடல்களை உடுமலை நாராயண கவிராயரும், மருதகாசியும் எழுதி இருந்தனர். இசை கே.வி. மகாதேவன்.

"கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி" - விவசாயப் பெருமக்களின் உயர்வை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்து சிறப்பாக பாடலை அமைத்திருக்கிறார் மருதகாசி.

முதலில் படத்தின் ஆரம்பமே இந்தப் பாடல் காட்சியாகத்தான் இருக்கவேண்டும் என்று




தேவர் நினைத்திருந்தார்.

ஆனால் எம்.ஜி.ஆரோ படம் ஆரம்பித்து ஐந்து நிமிடங்கள் கடந்த பிறகுதான் தன் அறிமுகமும் இந்தப் பாடல் காட்சியும் வரவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

அதற்கு அவர் சொன்ன காரணம்:

"படம் பார்க்க வருகிறவர்கள் எல்லோருமே முதல்லேயே வந்துடுவார்கள் என்று சொல்ல முடியாது. சில பல காரணங்களாலே ஐந்து நிமிடங்கள் தாமதமா வருபவர்கள் கூட இருப்பார்கள். அருமையான கருத்தைச் சொல்லும் இந்தப் பாட்டு எல்லாரையும் போய்ச் சேரணும். அதனால இரண்டாவது சீன் ஆரம்பமாக இந்தப் பாடல் காட்சி இருக்கட்டும்."

அவரது விருப்பப்படியே இந்தப் பாடல் காட்சி படம் ஆரம்பித்து ஐந்து நிமிடங்களைக் கடந்த பிறகே படத்தில் இடம் பெறும் வண்ணம் அமைக்கப்பட்டது.

பாடல் நிதானமான நடையில் அமைக்கப்பட சரணங்களுக்கு இடையில் வரும் இணைப்பிசையோ விறுவிறுப்பான வேகத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

"முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழுமூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ
வழங்கும் குணமுடையோன் விவசாயி"
"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"

இன்றளவும் படத்தின் பெயர் சொன்னாலே பளிச்சென்று வாய் தானாகவே முணுமுணுக்கும் பாடல் இது.

"நல்ல நல்ல நிலம் பார்த்து நாளும் விதை
விதைக்கணும்
நாட்டு மக்கள் மனங்களிலே நாணயத்தை
வளர்க்கணும்.
பள்ளி என்ற நிலம் தனிலே கல்வி தன்னை
விதைக்கணும்.
பிள்ளைகளைச் சீர்திருத்தி பெரியவர்கள்
ஆக்கணும்."

இது பாடல் அல்ல. பாடம். உடுமலையாரின் இந்தப் பாடல் வரிகள் வேறு எந்த இசைய மைப்பாளரிடம் சிக்கி இருந்தாலும் இந்த அளவுக்கு சிறப்பாக அவர்களால் கண்டிப்பாக அமைத்து இருக்க முடியாது.

"இப்படித்தான் இருக்கவேணும் பொம்பளை" - டி.எம். எஸ். - பி. சுசீலாவின் இணைவில் உடுமலையாரின் பாடல். இணைப்பிசையில் அமக்களப்படுத்தி இருக்கிறார் கே.வி.மகாதேவன்.

"காதல் எந்தன் மீதில் என்றால் காதில் இனிக்கிறது" - கிராமிய மணம் வீசும் டுயட்.

"என்னம்மா சிங்காரக் கண்ணம்மா" - டி.எம்.எஸ்.ஸுடன் பி.சுசீலா ஹம்மிங்கில் மட்டுமே இணையும் பாடல்.

"எவரிடத்தும் கவலை இல்லை. எனக்குத்தான் தொல்லை" - பி.சுசீலாவின் குரலில் சோகம் இழையோடும் பாடல்.

"விவசாயி" படப் பாடல்கள் அனைத்துமே வெற்றிகரமாக காற்றலைகளில் உலாவந்தன.

[தொடரும்]

மாக வைத்து எந்தவொரு பிரசாரங்களையும் செய்யவில்லை. இருவருமே தமிழ் மக்களை முக்கியமாகவும் கருதவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் மைத்திரி அவர்களின் காலில் விழுவதுபோன்று அவர்களுடைய கருத்துக்களை கேட்டுக்கொண்டு திரிகிறதே தவிர, அவர்கள் எங்களுடைய கருத்துக்களைச் செவிமடுக்கத் தயாராக இல்லை.

சிங்கள மக்களின் வாக்குகளைப் பிரதானமாக இலக்கு வைத்துத்தான் அவர்கள் வேலை செய்கின்றார்கள். விரும்பினால் நீங்களும் எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்ற நிலைப்பாட்டில்தான் இருக்கின்றரே தவிர, அவர்கள் தமிழ் மக்களை ஒரு பிரதானமாக கருதி எந்த விடயங்களையும் செய்யவில்லை. முஸ்லிம் மக்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தைக் கூட, தமிழ் மக்களுக்கு கொடுக்கவில்லை என்றுதான் நான் கருதுகின்றேன்.

இப்படியான ஒரு நிலையில் தமிழ் ஊடகங்களுக்கு ஒரு முக்கிய பொறுப்பிருப்பதாக நான் கருதுகிறேன். தகவல்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் உண்மையில் அரசியல் வாதிகள் தமது தேவைகள் கருதி, நலன்கள் கருதி இந்த விடயங்களை விழுங்கலாம். ஆனால், இந்த விழுங்கப்படுகின்ற விடயங்களை - உண்மைகளை - உரிய முறையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான பொறுப்பு ஊடகங்களுக்கு உரியது.

ஆனால், அவர்கள் அதனை சரியாக செய்யவில்லை என நான் நினைக்கின்றேன். துரதிஷ்டவசமாக இந்த ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் நான் ஏற்கனவே கூறிய விடயங்கள், பொது எதிரணியினரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தபோது அவர்கள் கூறிய கருத்துக்கள் அலட்சியங்கள் திட்டமிட்டபடி தமிழ் ஊடகங்களால் மறைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான காரணம் என்னவென்று புரியவில்லை. அரசியல் தலைவர்களின் அழுத்தங்கள் காரணம் போலும். தமிழ் ஊடகங்கள் இந்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு விரும்பாத நிலையில் இருக்கின்றார்கள்.

இது உண்மையில், அரசியல்வாதிகள் போன்று ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றதைப் போன்றது. இது தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமானதல்ல. நாளைக்கு இதனுடைய விளைவுகளை எல்லோரும் அனுபவிக்கின்றபொழுது, அதற்கான பொறுப்பு இந்த ஊடகங்களையும் சாரும்.

# தன் வினை தன்னைச் சுடும்

[சிறுவர் கதை]



ஜேர்மனி நாட்டில் ஹாட்டோ என்று ஒருவன் இருந்தான். அவன் மிகவும் தீய குணமுடையவன், இரக்கம் சிறிதும் இல்லாத கல்நெஞ்சம் கொண்டவன்.

அவன் காலத்தில் அங்கு பஞ்சமேற்பட்டது. அப்போது அளவிற்கு அதிகமான தானியங்களை சேகரித்து களஞ்சியங்களில் பதுக்கி வைத்து ஏழைகளுக்கு சிறிதும் கொடுக்காமல், அநியாய விலைக்கு விற்று வந்தான். அதில் பணம் அதிகம் கிடைத்ததால் பெரும் சந்தோஷமாக கவலைகள் ஏதுமின்றி வாழ்ந்து வந்தான்.

நாளடைவில் அவனது சேமிப்புக் கிடங்கில் தானியங்கள் இருப்பதை அறிந்து ஏராளமான எலிகள் அதனுள் புகுந்து மூட்டைகளைக் கடித்துக் குதறித் தானியங்களை நாசம் செய்தன. அதை கண்ட ஹாட்டோ தினமும் எலிப்பொறிகளை வைத்து அவைகளைப் பிடித்துக் கொன்று வந்தான். இருந்தாலும் எலிகள் அதிகமானதே தவிர குறையவில்லை.

தான் பதுக்கி வைத்துள்ள தானியங்கள் எல்லாவற்றையும் இந்த எலிகளே தின்று தீர்த்து விட்டால் என்ன செய்வது? என்று ஆத்திரமுற்ற ஹாட்டோ அவைகளை ஒரேயடியாக அழிக்க எண்ணினான்.

இதற்காக அங்குள்ள ஏழைகள் பலரைக் கூப்பிட்டுச் சேமிப்புக் கிடங்கினுள் எலிகள் இருக்கின்றதால் தானிய மூட்டைகளை அவசரமாக அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும், அதற்கு உதவினால் அவர்கள் எல்லோருக்கும் உணவளித்துக் கூலியாகத் தானியங்களும் தருவதாகக் கூறினான்.

அந்த ஏழைகளும் அவனின் வார்த்தைகளை நம்பி, அவன் சொன்னது போல தானிய மூட்டைகள் யாவற்றையும் அங்கிருந்து எடுத்து மற்றொரு இடத்தில் பத்திரப்படுத்தினார்கள். அவர்கள் அப்படி தானிய மூட்டைகளை அகற்றும் போது அவற்ள் இருந்து ஏராளமான எலிகள் தாவிக் குதித்து, அங்கிருந்த சந்து பொந்துகளில் ஓடி ஒளிந்தன.

எல்லா வேலைகளும் முடிந்தவுடன் அன்றிரவு உணவளிப்பதாகக் கூறி, அவர்களை அங்கு வரவழைத்து எலிகளோடு அவர்களும் சாகட்டும் என்று சேமிப்புக் கிடங்கினைப் பூட்டி நெருப்பு வைத்து விட்டான்.

தானியங்களை நாசப்படுத்திய எலிகளாலும், அந்த ஏழைகளாலும் இனி நமக்கு எந்தத் தொந்தரவும் இல்லை, நமக்கு தொல்லை விட்டது என்று எண்ணி கவலையே படாமல் தூங்கப் போனான்.

இதையறிந்த ஏழை மக்கள் பெரும் கோபத்தோடு கூட்டமாக ஹாட்டோவின் மாளிகையின் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். இதைப் பார்த்த ஹாட்டோவும் மிகுந்த கஷ்டப்பட்டு அவர்களிடம் இருந்து தப்பி ஓடினான். அவர்கள் விடாமல் அவனை விரட்டிப் பிடித்து எல்லோருமாக சேர்ந்து, அவனைக் காயப்படுத்தி எழுந்து நடக்க முடியாமல் செய்து விட்டார்கள்.

அவன் சேர்த்து வைத்திருந்த தானியங்களும் பறி போய்விட்டன.

ஹாட்டோ தன் வினை தன்னைச் சுடும் என்பதை நினைத்து நொந்து போனான்.



மகாகவி பாரதியின் நண்பர் எத்திராஜுலு நாயுடு, புகழ்பெற்ற வங்காள பேச்சாளர் சுரேந்திரநாத் பானர்ஜி மீது கொண்ட அன்பினால் தன்பெயரை "சுரேந்திரநாத் ஆர்யா" என்று மாற்றிக் கொண்டார்.

"என்று தணியுமிந்த சுதந்திரதாகம்"- என்ற பாடலை பாரதி, முதன் முதலில் கூட்டத்தில் பாடிய போது உணர்வு மேலிட சொற்பொழிவாற்றினார் ஆர்யா. ஆங்கில அரசு, தேசத்துரோக குற்றம் சாட்டி ஆர்யாவை கைதுசெய்து 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை தந்தது.

சிறையில் கொடுமை தாங்காமல், தற்கொலைக்கு முயன்ற செய்தி பத்திரிகையில் வந்தது. இதை புதுச்சேரியிலிருந்த பாரதியாரும்

# பாரதியும் ஆர்யாவும்

படித்து விட்டு தாங்கொண்ணா வேதனையுற்றார்.

ஆர்யா விடுதலை பெற்றபின், ஓரிரு மாதங்கள் கழிந்த பின்பு, இருவரும் சந்தித்தனர். கட்டித் தழுவி குசலம் விசாரித்துக் கொண்டனர். மிகவும் இளைத் துக் காணப்பட்ட ஆர்யாவின் தோற்றம் பாரதியை வருத்தியது. சாப்பிடச் சொன்னார்.

சாப்பிட்ட பின்பு, சுரேந்திரநாத் ஆர்யா, "தான் அமெரிக்கா போகவும், கிறிஸ்தவனாக மாறவும் முடிவு செய்துவிட்டதாகத் தெரிவித்தார்". சிறையிலும், வெளிவந்த பின்பும் டேனிஷ் பாதிரிமார்கள் செய்த உதவிக்கு இதுவே என் கடமையும் நன்றியுமாகும்" என்றதோடு,

"அந்நியருக்கு அஞ்சி, என்னோடு பேசக் கூட பயந்து ஒதுங்கும் இந்துக்களை நான் விரும்பவில்லை" என்றார்.

"நல்லது; உன் வருத்தம் புரிகிறது. நீ பெற்ற நன்மைக்கு நன்றியை காட்ட எண்ணுகிறாய். உன் முடிவை மாற்ற விரும்பவில்லை... ஆனால் தாய்நாட்டுக்குத் திரும்பிவா. போய் வா... தாய் திருநாட்டை மறந்து விடாதே" என்றார்.

அதுபோலவே, இந்தியாவிற்கு சில காலம் கழித்து வந்த ஆர்யா, கிறிஸ்துவ பாதிரியராக சென்னையில் வசித்து வந்தார்.

பாரதி இறந்த செய்தியைக் கேள்வியுற்ற ஆர்யா அவருடைய உடலை இடுகாட்டுக்கு சுமந்து சென்றார்.

ஆர்யா பின்னர் ஜஸ்டிஸ் கட்சியில் சில காலமும், பிரம்மஞான சபையில் சிலகாலமும் இருந்தார். 1952 இல் வறுமையில் உழன்று இறந்து போனார்.

(ஆதாரம்: 'பாரதியின் குருமார்களும், நண்பர்களும்.')



# தெரியுமா?

♦ யானையின் தந்தம் சுண்ணாம்பால் ஆனது.

♦ காண்டாமிருகத்தின் கொம்பு ரோமங்களால் ஆனது.

♦ மானின் கொம்பு எலும்பால் ஆனது.

♦ மாட்டின் கொம்பு கெரட்டினால் உருவானது.

♦ எறும்பின் உடல் 1000 தசைகளால் உருவானது.

♦ கம்பளிப் பூச்சியின் உடல் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தசைகளால் ஆனது.

♦ மேல் நோக்கிப் பார்க்க முடியாத விலங்கு - பன்றி

♦ நீந்தத் தெரியாத விலங்கு - ஒட்டகம்

♦ பறக்கத் தெரியாத பறவை - பெங்குவின்

♦ நாக்கை வெளியே நீட்ட முடியாத விலங்கு - முதலை

♦ கூடு கட்டத் தெரியாத பறவை - குயில்

♦ மிகக் குறைந்த ஆயுள் கொண்டவை - ஈசல்

♦ நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் - ஆமை

♦ கலைமானின் வயதை அதன் கொம்புகளைக் கொண்டு கணக்கிடுவார்கள்.

♦ ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு கரு நீல நிறத்தில் இருக்கும்.

♦ நீர்யானையின் பால் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

♦ ஆபிரிக்காவில் காணப்படும் வெள்ளைக் காண்டாமிருகத்தின் உதடுகள் சதுர வடிவில் இருக்கும்.

♦ வரிக்குதிரையின் வரிகள் நம் கைரேகையைப் போன்றவைதான். ஏந்த இரு வரிக்குதிரைகளுக்கும் ஒரே மாதிரியான வரிகள் உடம்பில் இருக்காது.

♦ பூனை தன் தலையைச் சொறிந்துகொள்ள முன் கால்களை உபயோகிக்காது. பின்கால்களையே பயன்படுத்தும்.

♦ தண்ணீர் அருந்தாமல் ஒரு வாரம்கூட இருக்கும் உணவின்றி 10 நாள்கள்கூட இருக்கும். ஆனால், தூக்கமின்றி 4 நாள்களுக்கு மேல் இருக்க முடியாது ஓநாயால்.

# மகா காவியத்தை யாத்த "அரசகேசரி"வாழ்ந்த புனித பூமியாம் நீர்வேலி!




நீர்வேலி இலங்கையின் யாழ்ப்பாண தீபகற்பத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஒரு கிராமம். இந்த ஊரின் எல்லைகளாக கிழக்கே கைதடியும் வடக்கே சிறுப்பிட்டியும் மேற்கே அச்செழு, ஊரெழு ஆகியவையும் தெற்கே கோப்பாயும் உள்ளன. வாழைச்செய்கை, குடிசைக்கைத்தொழில், சவாரித்திடல், கூட்டுறவுச் சங்கம், வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றுக்குப் பிரபலமான ஊராகும்.

### பெயர்க்காரணம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் நீர்வேலிக் கிராம நிர்வாகம் உள்ளடங்குகிறது. இவ்வூரின் பெயர்க்காரணமாக நீரை வேலியாக உடையதால் நீர்வேலி என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது. நீர்வேலி ஊரின் கிழக்கெல்லையாக நீர்நிலை உள்ளமை இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது. இது தவிர "வேலி" என்ற சொல்லிற்கு ஊர், இடம் என்ற பொருள்களும் தமிழ் அகராதியில் உண்டு. அச்சுவேலி, கட்டைவேலி, விளைவேலி, சங்குவேலி, திருநெல்வேலி போன்ற யாழ்ப்பாணத்துக் கிராமங்களின பெயர்களும் வேலி என்ற சொற்பதத்தைத் தம்மகத்தே உடையனவாயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திலிருந்து பதினைந்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இக்கிராமத்தை இராஜவீதி மற்றும் யாழ் -, பருத்தித்துறை நெடுஞ்சாலை என்பன நகரத்துடன் தொடுக்கின்றன. பெயருக்கேற்ற வகையில் நீர்வேலி தண்ணீருக்குப் பஞ்சம் இல்லாத ஊர். இதனால் நீர்ப்பஞ்சம் இல்லாத இந்த ஊரில் விளைச்சலுக்கும் குறைவில்லை. பஞ்சமில்லாத இந்த ஊரில் வாழ்வோர் கொடைச்சிறப்பு உடையவர்களாக வாழ்கின்றனர். இக்காரணத்தால் தொன்மைக்காலம் தொட்டு ஒழுக்கத்துடனும் கொடைச்சிறப்புடனும் இக்கிராம மக்கள் வாழ்ந்துள்ளனர்.இக்கிராம மக்கள் வழங்கிய விருந்துபசாரத்தில் மகிழ்ந்த வரகவி சின்னத்தம்பிப்புலவர் "நீர்வேலி கோப்பாய் நிறை செல்வமாகும்" என்று பாடியுள்ளார்.

நீர்வையம்பதி - நீர்வேலி என்றெல்லாம் அழைக்கப் படுகின்ற இந்த ஊர் வரலாற்றுச்சிறப்புமிக்கது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழரசர்களில் ஒருவனான சிங்கைப் பரராஜசேகரனின் மருமகனும் அவனது முதல் மந்திரியாகத் திகழ்ந்தவனுமாகிய தமிழில் இரகுவம்ச மகா காவியத்தை யாத்த "அரசகேசரி" என்பவன் அமைத்ததாகக் கருதப்படும் அருள்வளர் சிறிஅரசகேசரிப் பிள்ளையார் கோவில் நீர்வேலியூரின் நடுநாயகமாக விளங்குகிறது. இது இவ்வூரின் தொன்மைச் சிறப்பைக் காட்டி நிற்கிறது. இவ்வூரினூடே பழங்கால ராஜாக்கள் பாவித்த "இராஜவீதி" ஊடறுத்துச் செல்கின்றமையும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

இயற்கை வளங்கள் நிறைந்த இந்த ஊர் வாழைக்குப் பெயர் பெற்றது. இதனால் "கதலிவனம்" என்கிற சிறப்பை உடையது. தவிர அறிஞர்களும் குருமார்களும் கலைஞர்களும் வேளாண்மை செய்பவர்களும் கவிஞர்களும் நிறைந்து வாழ்ந்ததாலும் வாழ்வதாலும் இவ்வூர் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. அதிகளவில் இந்துக்கள் வாழும் இந்த ஊரில் இந்துக்கோவில்கள் அதிகளவிலும் சிறப்புற்றும் காணப்படுகின்றன.


### பொருளாதாரம்

பொருளாதார ஈட்டல்களை பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில், வியாபாரம், அரசாங்க மற்றும் தனியார் துறைகளிலும் மக்கள் பணியாற்றுகின்றனர்.

### கமமும் கைத்தொழிலும்

நீர்வேலியின் செல்வமாக சுமார் 3900 இற்கும் மேறபட்ட பரப்புடைய வயல் நிலம் இருக்கிறது ஆனால் போரும் அது தந்த பின்னடைவுகளும் அவற்றில் முழுமையும் பயன்படுத்தப்படாமலிருக்கிறது.

ஆவணி அல்லது புரட்டாதி மாதங்களில் இங்கு நெல் விதைப்பு இடம்பெறும். அறுவடையின் பின்னர் இத்தரவை மந்தை மேய்ப்பிற்கு உரிய நிலமாகப் பேணப்படுவதையும் அவதானிக்கலாம். இக்காலப்பகுதியில் இங்குள்ள சவாரித்திடலில் "மாட்டு வண்டில் போட்டி"களும் இடம் பெறுகின்றன. வயல நிலத்திற்கு அடுத்த படியாக வீட்டு நிலப்பயிர்ச் செய்கையும் முக்கிய இடம்பெறுகின்றது.



நீரவேலி வாழைச செய்கைக்கு பெயர் பெற்ற பூமி. 12000 பரப்பு தோட்டநிலத்தில் இது செய்கை பண்ணப்படுகின்றது. தோட்டங்களில் எட்டு அடி இடைவெளியில் வாழைக்குட்டிகளை நாட்டிச் செய்கை பண்ணுவதை அவதானிக்கலாம்.போரின் காரணமாக வெளியிடத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் வாழைக்குலைகள் உரிய விலைபோகாமல் இங்குள்ள விவசாயிகள் வேதனைப்பட்டனர். தற்போது இந்த நிலை மாற்றமுற்று வருவது மகிழ்ச்சிக்குரியது. .இது தவிர புகையிலை, வெங்காயம் போன்றனவும் மரக்கறிச் செய்கைகளும் பரவலாக நீர்வேலியில் இடம் பெறுவதை அவதானிக்கலாம்.நீர்வேலியில் விவசாயத்தைப் போலவே கைத்தொழிலும் சிறப்புற்றிருக்கின்றது. இரும்புத் தொழில்கள் மற்றும் மரவேலைகள் நீர்வேலி காமாட்சியம்பாள் கைத்தொழிற்சங்கத்தினை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

இங்கே மிதிவண்டி, மணிக்கூடு போன்றன கூட உருவாக்கப்பட்டதாகக் கூறுவர். போரின் வடுக்களை இங்கும் காணலாம். இந்துச்சிற்ப சாஸ்திர மரபுப்படி வாகனங்கள், தேர் போன்றவற்றைச் செய்து வரும் ஆச்சாரியார்களும் நகை வேலை செய்யும் மக்களும் நீர்வேலியின் கைத்தொழிற்துறையில் தடயம் பதித்துச் செயற்படுகின்றனர். இவற்றினைப் போலவே சுருட்டுக் கைத்தொழிலும் சிறப்புற்று விளங்குகிறது.

### கல்வி

கல்வி வளர்ச்சியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியினது பங்கு பிரதானமானதாகும். நீர்வேலியில் அத்தியார் இந்துக்கல்லூரி, சீ.சீ.தமிழ்க்கலவன் பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், றோ.க.த.க. பாடசாலை, இந்துத்தமிழ்க்கலவன் பாடசாலை என்ற ஐந்து பாடசாலைகள் அமைவு பெற்றுள்ளன. 1850ம் ஆண்டளவில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதரால் ஆரம்பிக்கப்பட்ட சிவப்பிரகாசவித்தியாலயம் என்ற பாடசாலை 1920களில் கிறிஸ்தவமிஷனரி மாருக்கு விற்கப்படவிருந்த சமயத்தில் அத்தியார் அருணாசலம் அதனை விலை கொடுத்து வாங்கி இன்றுள்ள அத்தியார் இந்துக்கல்லூரியை ஆங்கிலப் பாடசாலை - தமிழ் மொழிப்பாடசாலை என்ற இரு பிரிவுகளாக்கி 11-02.1929 அன்று தொட்டு திறந்து செயற்படச்செய்தார். எண்பது ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றி சிறப்புடன் மிளிர்கின்றது இக்கல்லூரி.



இதேபோலவே 125 ஆண்டுகளைக் கடந்தும் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயச் சூழலில் சீ.சீ.தமிழ்க்கலவன் பாடசாலை அறிவொளி பரப்பி வருகிறது.1905இல் சுவாமி ஞானப்பிரகாசரால் ஸ்தாபிக்கப்பட்ட றோ.க.த.க பாடசாலையும் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயமும் சிறுவர்களின் அடிப்படைக் கல்வியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது.இவை போலவே கடந்த ஐம்பது வருடங்களாக நீர்வேலி தெற்கில் இந்துத்தமிழ்க்கலவன் பாடசாலை இயங்கி வருகின்றது. நீர்வேலியின் கல்விப்புலத்தில் தனியார் கல்வி நிலையங்களும் முன்பள்ளிகளும் அறநெறிப் பாடசாலைகளும் கூட தத்தம் நிலையங்களை நாடி வருவோர்க்கு அறிவொளியூட்டி வருகின்றன.அதற்கு மேலாக எமது ஆலயமானது சின்னஞ்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்பள்ளி அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அத்தோடு அறநெறிப்பாடசாலையின் ஊடாக எல்லா மாணவர்களுக்கு சமய பாட வகுப்புக்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

### ஆன்மிகம்


ஊரின் நடுநாயகமாக விளங்கும் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் திருக்கோவிலின் திருமஞ்சனக்கிணறு அற்புதமானதும் தான்தோன்றியானதும்



ஆகும். இதனை ஒட்டிப் பல செவிவழிச் செய்திகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பிள்ளையார் கோவிலில் பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சிவ பெருமானுக்கும் முதன்மையான இடமுள்ளமையும் குறிபிடத்தக்கது. இந்த ஆலயத்தில் உள்ள திருத்தேர் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. கலைநயும் மிக்கது. இத்திருக்கோவில் போலவே நீர்வேலி தெற்கில் புகழ்மிக்க கந்தசுவாமி கோவில் அமைந்துள்ளது. அழகிய இராஜகோபுரத்துடன் திகழும் இக்கோவி லிலுள்ள ஆறுமுககசுவாமி மற்றும் நடராஜர திருவுருவங்கள் புராதன சிற்பக்கலைச் சுவைஞர்களுக்கு அரிய பொக்கிஷமாகும்.



நீர்வைக்கந்தனின் வடக்கு வீதியில் பொலிஸாரின் கலாசார விழா



சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூலகம்

# மாற்றுத்திறனாளிகளுக்கு வசதி

## நிறுவனத்தலைவர்களுக்கு அறிவுறுத்தல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய மாற்றுத்திறனாளிகளுக்கு சகல பொதுக் கட்டடங்களிலும் அணுகும் வசதி இருபபதை உறுதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

2014 .10.16 ஆம் திகதிக்குள் மாற்றுத் திறனாளிகள் அணுகும் வசதி உள்ளதாக கட்டடங்கள் அமைக்கப்படல் வேண்டும் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மேலும் ஒரு வருட கால அவகாசத்துடன் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை அணுகும் வசதி அமைக்கப்படாத பொதுக் கட்டடங்களில் அமைத்தல் வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதற்கான அறிவித்தல் உரிய நிறுவன தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

சென்ற வருடத்தில் சகல பொதுக்கட்டடங்களிலும் அணுகும் வசதி ஏற்படுத்தப்படல் வேண்டுமென்ற அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

தற்போது அது தொடர்பான நினைவூட்டலை அரசாங்க அதிபர் விடுத்து வருகிறார்.

பொதுக் கட்டடங்களில் அணுகும் வசதி ஏற்படுத்தப்படாவிட்டால் உச்ச நீதி மன்றம் வழக்குத் தொடர முடியும். அத்துடன் புதிதாக அமைக்கப்படும் சகல கட்டடங்களிலும் அணுகும் வசதி ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பது சட்டபூர்வமாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (90)

## போக்குவரத்து பாதிப்பு

வாதரவத்தை பெரிய பொக்கணை பிள்ளையார் வீதியில் அரைகிலோ மீற்றர் தூரத்திற்குள் வீதியை மூடி இரண்டு அடிக்கு மேல் வெள்ளம் நிற்பதால் மக்கள் போக்கு வரத்து செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. இவ் வீதியால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (08)


## இரத்ததான முகாம்

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் 25 நன்கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்திருந்தனர். இந்நிகழ்வினை வல்வெட்டித்துறை ஊரணி பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

வல்வையில் மழை பெய்து கொண்டிருந்த போதும் இரத்ததான முகாம் பி.ப. 12.30 மணிவரை நீடித்திருந்தது.

கடந்த வருடத்தில் மூன்று முறை இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

## வெள்ளி நற்சிந்தனை...



## கெட்டவர்களைக் கண்டால் ஒதுங்கு

**உடன்பாடு இலாதவர் வாழ்க்கை –•குடங்கருள்**
**பாம்போடு உடன் உறைந்தற்று – குறள் 890**

உட்பகை எனும் அதிகாரத்தில் உள்ள குறள், உள்ளம் ஒன்றிற்காதவரோடு கூடி வாழ்வது ஒரு குடிசையில் பாம்போடு சேர்ந்து வாழ்வதைப் போலாகும். என்று உறைக் கின்றது.

ஒருவர் தன் வாழ்வில் வெளிப்பகை உடையாரோடு பழகலாம்; ஆபத்தில்லை ஏனென்றால் பகை வெளியே தெரியும். ஆனால் உட்பகை கொண்டு முகம் நக பல்காட்டும் பகைவருடன் மிகவும் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். வாளைப் போல், வெளிப்படையாக 'வெட்டுவேன்' கொத்து வேன் என்று வரும் பகைவருக்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை ஆனால், உறவைப் போல வெளியே நடித்து மறைவாகக் கீழ் அறுக்கும் உட்பகைக்கே நாம் அஞ்ச வேண்டும். இவர்களுடன் பழகுவதைத்தான் " துஷ்டரைக்கண்டால் தூர விலகு" என்று நம் பெரியவர்கள் கூறியுள்ளனர்.

ஒரு யானை ஆற்றில் குளித்துவிட்டு, மறுகரைக்குச் செல்லத் தயாரானது மறுகரையில் பன்றி ஒன்று சேற்றில் விளையாடிக் கொண்டிருந்தது. சுத்தமாக இருந்த யானையைக் கண்ட பன்றிக்கு பொறாமை உண்டானது. யானையைச் சீண்டிப் பார்க்க முடிவெடுத்தது.

ஆற்றுக்குக் குறுக்கே இருக்கும் பாலம் மிகவும் குறுகியது. அதன் வழியாக யானையின் வருகையைப் பன்றி எதிர்பார்த்துக் காத்திருந்தது. யானை பாலத்தில் நுழைந்து நடுப்பகுதிக்கு வந்துவிட்டது. பன்றி உடனே யானையை நோக்கி ஓடியது ஒடுக்கமான பாலம் என்பதால், எப்படியும் தன் உடம்பில் இருக்கும் சேற்றினை யானை மீது தற் செயலாக மோதுவது போல பூசி விடலாம் என கணக்குப்போட்டது. சுதாகரித்துக்கொண்ட யானையோ, ஓரமாக நன்றாக ஒதுங்கி நின்று பன்றிக்கு வ்ழி விட்டது. பன்றி ஏமாந்து போனது இனியும் வம்புக்குப் போனால் ஆபத்தாகி விடுமெனப் பயந்து அப்படியே சென்று விட்டது. மறுகரையில் நின்ற தன் நண்பனான மற்றொரு பன்றியிடம் "நண்பா! பார்த் தாயா! பயந்தான் கொள்ளி யானை! கோவில் பிரசாதம் சாப்பிட்டு கொழுத்து இருப்பது தான் மிச்சம்! சிறியவனான என்னைக் கூடப் பார்த்து பயந்து போறதைப்பாரு ! என்று சொல்லிச் சிரித்தது.

அதைக்கேட்ட நண்பன் ஏ முட்டாள்! அப்படி எண்ணாதே! யானை ஆற்றில் குளித்து விட்டு போகிறது. நீயோ சேற்றில் குளித்துவிட்டு அழுக் கோடு திரிகிறாய். ஒருவேளை யானையின் காலில் சிக்கியிருந்தால் ஒரே மிதியில் உன் உயிர் போய்விடும். ஆனாலும் அந்த யானை உன்னை மிதித்து தன் காலைச் சேறாக்கிக் கொள்ள விரும்பவில்லை. அதனால் ஒதுங்கிப் போனது என்பதைப் புரிந்து கொள் என்றது.

உலகில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள் கெட்டவர்களைப் பார்த்தால் (உட்பகை கொண்டவர்கள்) நல்லவர்கள் அவர்களுடன் மோத முயலாமல், ஒதுங்கிப் போவதே நல்லது. பன்றி மேல் மோதினால் மோதியவருக்கே நஷ்டம்! எனவே உட்பகை உடைய கெட்டவர்களைக் கண்டால் ஒதுங்கிப் போய் விடுங்கள்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிருக்கப் பெட்டகம்

ஜெயமோகனிடம் ஹெகலின் முரணியக்க சிந்தனையின் தாக்கம் உள்ளது. உதாரணமாய் தீமையும் நன்மையும் சேர்ந்து முயங்கும் போது தான் வாழ்க்கை உருவாகிறது என்றால் அது முரணியக்க சிந்தனை. அதை ஜெயமோகனிடம் பார்க்கலாம். ஒருமுறை அவர் அடிமைத்தனம் உள்ள சமூகம் தான் இலக்கியம், கலை ஆகியவற்றை மேலெடுக்கும் என்றார். அதாவது கலை, இலக்கியம் அடிமைத்தனத்துக்கு எதிரானது. ஆனால் அடிமைகளும், சுரண்டலும் உள்ள சமூகத்தில் தான் ஒரு தட்டினருக்கு கலை இலக்கியத்தில் ஈடுபடும் வசதியை நேரத்தை அதற்கான சூழலும் தோன்றுகிறது.

அது போல் சாத்தான் இல்லாத உலகில் கடவுளுக்கு இடமில்லை. ஏமாற்றம் இல்லாத போது ஆசை தோன்றாது. கடும் கட்டுப்பாடுகள் உருவாகும் போது அங்கு கலக சிந்தனை தோன்றும். உடம்பில் வியாதி பரப்பும் கிருமிகள் இருந்தால் தான் எதிர்ப்பு சக்தி தோன்றும். கிருமிகளே இல்லாத சூழலில் மனிதன் வலுவற்றுப் போவான். அதாவது கிருமிகளும் வேண்டும், தடுப்புச் சக்தியும் வேண்டும். இரண்டுக்கும் ஒரு சமநிலை வேண்டும். அப்போது தான் வாழ முடியும். ஒன்று கூடினாலோ குறைந்தாலோ உயிர் இருக்காது. இப்படி முரண்கள் தான் வாழ்க்கையின் இயக்கத்துக்கு காரணமாகின்றன என்பது முரணியக்க சிந்தனை.

ஷிஷெக் இதே போல் மிகப்பெரிய அன்பு வெறுப்பை சரிசமமாய் கொண்டது என்பார். அதாவது ஒரு பெண்ணை ஆவேசமாய் முத்தமிடும் போது அடிமனதில் அவளது கழுத்தை நெரிக்கும் உக்கிரமும் தோன்றுகிறது. கொலை விருப்பம் இல்லாமல் காமம் இல்லை. முயக்கம் இல்லை.

அடிப்படையில் இவர்கள் எல்லாம் ஒரே மாதிரி யோசிக்கிறவர்கள். அதாவது நிலைப்பாடுகளில் மாறுபட்டாலும் ஜெயமோகன் மற்றும் இடதுசாரிகளின் ஆயுதமும், அடவு முறையும் ஒன்று தான். ஒரே தர்க்கத்தைத் தான் இருவேறு விதமாய் பயன்படுத்துகிறார்கள். அதாவது ஹெகலின் தாக்கத்தில் தான் மார்க்ஸியம் உருவானது. அதன் குட்டிக் கிளையாக ஜெயமோகனிஸமும் தோன்றியது. **– ஆர். அபிலாஷ்**

நண்பர்கள் மட்டும் அல்ல; எல்லா மனித உறவுகளிலும் நான் கண்ணியம் காக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதையே அவர்களிடமும் எதிர்பார்க்கிறேன். அப்படி நடக்கவில்லை என்றால் மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் தருவேன். கடைசியில் ஒதுங்கி விடுவேன். என் மனைவியை சமைக்கச் சொல்லி நான் ஒருவேளை கூட உண்டதில்லை. இருவரும் சேர்ந்தேதான் சமைப்போம். இது ஒன்றும் ராணுவ விதி அல்ல. புரிந்து கொள்ளல். நம் இருவரின் வேலையை நாம் இருவருமே பகிர்ந்து கொள்வோம் என்ற அடிப்படை தர்மம். இதுவே எல்லா உறவுகளிலும். பணிப்பெண் வராவிட்டால் என் மகன் தான் பாத்திரங்களைத் தேய்ப்பான்.


என் வீடு என்பதை நான் ஒரு உதாரணமாகவே சொல்கிறேன். இதன் அடிப்படை என்னவென்றால், யாரையும் சுரண்டாமல் வாழ்வது. அடுத்தவர் உழைப்பில் வாழ்வதைத் தவிர்ப்பது. உங்களுக்கு ஒரு சிகரெட் வேண்டுமென்றால் உங்கள் நண்பனின் சிகரெட்டை எடுக்கக் கூடாது. எடுத்தால் அவனுக்குக் காலையில் தேவைப்படும் போது இருக்காது. அதேபோல், என் ரத்தம் சிந்தி என் மகனுக்காக நான் வீடு கட்ட மாட்டேன். அவனுக்குத் தேவையெனில் அவனேதான் கட்டிக் கொள்ள வேண்டும். அவனுக்கே அது தெரியும் விதத்தில்தான் அவனை நான் வளர்த்திருக்கிறேன். அதற்கு வேண்டிய கல்வியையும் கொடுத்து விட்டேன். அது போதும். என் வாழ்க்கையை நானும் அவனுடைய வாழ்க்கையை அவனும் நிம்மதியாக வாழ வேண்டும். நான் பார்க்கும் மனித உறவுகளில் பெரும்பாலான இடங்களில் இது இல்லை.

நான் கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள்ள விரும்பினேன். நீ போய் கற்றுக் கொள் என்று சொல்லும் எத்தனை தகப்பன்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? நான் அவனுக்கு நல்லதுதானே செய்கிறேன் என்கிறார்கள். இந்த "நல்லது" தான் ஆபத்தானது.

அடுத்தவனை உரசாத, அடுத்தவனைச் சுரண்டாத எந்த உறவும் நன்றாகவே இருக்கும். **– சாரு நிவேதிதா**

# உண்மையான மாற்றம்

ஏற்படுத்துவதாகக் கூறி போட்டியிடும், பொது வேட்பாளரின் அரலிய கூட்டு நிறுவனத்தாரிடம் குவிந்து கிடக்கும் சொத்து விபரங்கள் பற்றி **நீங்கள் அறிவீர்களா?**




கிரீன் ஹில்ஸ் ஹோட்டல் - நுவரெலியா




சுது அரலிய ஹோட்டல் - பொலன்னறுவை




அரலிய கலுகல் (கருங்கல்) தொழிற்சாலை - பொலன்னறுவை




அரலிய அரிசி உற்பத்தி நிறுவனம் - பொலன்னறுவை





அரலிய என்ஜினியரிங் (தனி) நிறுவனம் - பொலன்னறுவை




அரலிய அம்ட்ரட் நிறுவனம் - பொலன்னறுவை




அரலிய மண் விநியோகம் - மனம்பிட்டிய




அரலிய காணி விற்பனை நிறுவனம் - கடவத்தை

## காதால் கேட்பது மட்டுமன்றி, கண்களால் பார்த்து அறிவினால் சிந்தியுங்கள்...

(C/3975)

34) நரேன் படிப்பில் ஆர்வம் காட்டுவதில்லை அவன் எந் நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான் தாயும், தந்தையும் பாடங்களைப் படிக்கும் படி எப்பொழுதும் அறிவுரை அவனுக்கு கூறுவர். நரேன் சிறிதளவும் அவற்றை கேட்பதில்லை
இத் தொடரை விபரிக்கும் மிகச் சரியான தொடர் எது?
1) செவிடன் காதில் ஊதிய சங்கு போல
2) குருடனுக்கு குருடன் வழி காட்டியது போல
3) குளிக்கப் போய் சேறு பூசியது போல

35) இலக்கண பிழையின்றி எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிவு செய்க
1) காலையில் பூக்கள் மலர்ந்தது
2) ஆண்டுகள் பல கழிந்தது
3) ஓர் ஆடு புல் மேய்ந்தது

36) விதுரனின் தந்தையின் தந்தைக்கும் விதுரனின் அண்ணனிற்கும் இடையே உள்ள உறவு முறை யாது?
1) மாமா, மருமகன்
2) பாட்டன், பேரன்
3) சிறியதந்தை, மகன்

37) ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி 24ஆம் திகதி வரையுள்ள நாட்களின் நடுவில் வரும் திகதி யாது?
1) ஜனவரி 16 ஆம் திகதி
2) ஜனவரி 26ஆம் திகதி
3) ஜனவரி 28ஆம் திகதி

38) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க
அடக்கமும், நேர்மையும் மிக்க ...................... அமெரிக்க நாட்டின் ..........................
1) எடிசன், பிரதமரானார்
2) ஆபிரகாம் லிங்கன், ஜனாதிபதியானார்
3) தெனாலிராமன், அமைச்சரானார்

39) சங்கரியிடம் 2ரூபா நாணயங்களாகவும், 5ரூபா நாணயங்களாகவும் ரூபாய் 86 உள்ளது. அதில் இருக்கதக்க 2 ரூபா நாணயங்களின் எண்ணிக்கை யாது?
1) 5
2) 7
3) 3

40) ஓரிடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த சிறுவன் ஒருவன் 20m தெற்கு நோக்கியும் அவ்விடத்தில் இருந்து 10m கிழக்கு நோக்கியும் மீண்டும் 15m வடக்கு நோக்கியும் சென்று அவ்விடத்தில் இருந்து மேற்கு நோக்கி 10m சென்று பயணத்தை முடித்தான். அச் சிறுவன் இப்பொழுது தொடக்க இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான்.
1) 15m
2) 10m
3) 5m

41) நம் நாட்டு தேசியகீதம் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருப்பதுடன் எழுவாய் பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்
01.......................................................................................
02.......................................................................................
03.......................................................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1). 3 | (2). 2 | (3). 2 | (4). 1 | (5). 3 | (6).3 | (7).1 | (8). 2 | (9). 1 | (10). 1 | (11).1 |
| (12).3 | (13).2 | (14).1 | (15).3 | (16).1 | (17).2 | (18).1 | (19).3 | (20). 2 | (21).1 | (22).2 |
| (23).2 | (24).3 | (25).1 | (26).3 | (27).2 | (28).1 | (29).1 | (30).1 | (31).2 | (32).3 | (33).2 |
| (34).1 | (35).3 | (36).3 | (37).1 | (38).3 | (39).2 | | | | | |

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
45 நிமிடம்

# கல்வி முரசு



1 தொடக்கம் 41 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

ஒரே கூட்டத்தை சேராத சொற்கள் இடம்பெறும் கூட்டத்தை தெரிக

01)
01) முசு, கச்சல், வடு
02) வடலி, பிணா, பருப்பு
03) களிறு, கலை, காளை

02)
02) திங்கள், மதி, அம்புயம்
02) பரவை, ஆழி, சாகரம்
03) லயம், மடி, அங்குசம்

சரியான விடையை தெரிவு செய்க

03) 6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்கும் ஒரு கடிகாரம் மு.ப 8மணிக்கு ஒலித்தது. அது மீண்டும் ஒலிக்கும் நேரம் யாது?
1) பி.ப.2மணி 2) மு.ப.11மணி 3) நண்பகல் 12மணி

04) காலைக்கூட்டத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒவ்வொரு மாணவர் நற்சிந்தனை கூறுவது வழக்கம். வாசன் மே மாதம் 20 ஆம் திகதி நற்சிந்தனை கூறினான். அவன் இன்னும் 6 வாரங்களில் மீண்டும் நற்சிந்தனை கூற வேண்டும். எனின் எத்தனையாம் திகதி நற்சிந்தனை கூறுவான்?
1) யூலை 1ஆம் திகதி 2) யூன் 27ஆம் திகதி 3) யூலை 4ஆம் திகதி

05) 6 பசுக்கள் 6 நாட்களில் 6 சாக்கு புல்லை உண்ணும் எனின், ஒரு பசு ஒரு சாக்கு புல்லை உண்பதற்கு எத்தனை நாட்கள் தேவை?
1) 1 நாள் 2) 6 நாள் 3) 36நாள்

06) தேவனின் மகன் அமலன்,ராதிகாவின் சகோதரன் தேவன், சாரனாவின் தம்பி அமலன், ராதிகாவின் மகள் அபிரா, அதன்படி சாதனாவிற்கு அபிரா என்ன உறவுமுறை?
1) சகோதரி 2) மாமி 3) மைத்துனி

07) நில்மாவின் வயது 9ஆண்டுகளாக இருக்கும் போது வர்ஷினியின் வயது 13 ஆண்டுகளாகும். வர்சியின் வயது நில்மாவின் வயதை விட இரு மடங்காக இருந்த போது வர்ஷினியின் வயது எத்தனை ஆண்டுகள்?
1) 4வருடங்கள் 2) 6வருடங்கள் 3) 8வருடங்கள்

08) .?. இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?
1) 4
2) 6
3) 9

12, 15, 5    8, 15, 9    6, -?-, 6


07) வெற்றிடங்களில் வர வேண்டிய எண்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 06 |
| 4 | .. | 3 | 24 |
| 2 | 3 | .. | 30 |
| 16 | 18 | 15 | |

1) 5,3
2) 2,5
3) 3,2

10) சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை தராத பழமொழி எது?
1) அலை வரும் போது தலை முழுகு
2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
3) கீரைக்கடைக்கும் எதிர் கடை வேண்டும்


11) இவ்வுருவை மாத்திரம் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உருவை தெரிவு செய்க



12) 9 ...... 9 ...... 9 ....... 9 ...... 9 ..... = 9 — கணித செய்கையில் வெற்றிடத்திற்கு வரவேண்டிய கணிதச்செய்கை குறியீடுகளை தெரிக

1) +.X.  2) -.X.+.  3) .X.+. X


13) வெற்றிடத்துக்கு வரவேண்டிய பகுதியை தெரிவு செய்க



14) இலங்கை குடியரசு மாற்றப்பட்டது
1) 20ஆம் நூற்றாண்டின் 7ஆம் தசாப்தம்
2) 21ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தம்
3) 20ஆம் நூற்றாண்டின் 8ஆம் தசாப்தம்

15) சதுர வடிவ மேசை ஒன்றின் நான்கு பக்கங்களிலும் கவி, மதி, தினேஸ், ரவி ஆகியோர் அமர்ந்திருந்தனர். கவியின் இடதுபக்கம் மதி இருந்தான். தினேஸின் இடது பக்கம் ரவி இருந்தான். ரவி கவிக்கு எப்பக்கத்தில் இருந்தான்.
1) இடதுபக்கம்  2) வலது பக்கம்  3) முன்னால்

16) இவ்வுருவைச் சுற்றி நிறம் தீட்டப்பட்டது எனின், மூன்று முகங்களும் நிறந்தீட்டப்பட்ட சதுரமுகி குற்றிகள் எத்தனை உள்ளன?
1) 4  2) 8  3) 6



17) 
இவ்வுருவில் உள்ள சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?
1) 1  2) 2  3) 3

நிஹாராவின் வயது லீலாவின் வயதின் இரு மடங்காகும். குமாரியின் வயது லீலாவின் வயதின் அரைவாசியாகும். மேரியின் வயது லீலாவினதும், குமாரியினதும் வயதுகளின் கூட்டுத்தொகைக்கு சமனாகும்.

18) இவர்களில் வயதில் குறைந்தவர்கள் யார்?
1) குமார்  2) மேரி  3) லீலா

19) எவ்விருவரினது வயதுகளின் கூட்டுத்தொகை நிஹாராவின் வயதிற்கு சமனாகும்
1) லீலா,குமாரி  2) மேரி,லீலா  3) மேரி,குமாரி

20) 2013 ஆம் ஆண்டின் நடுவில் வரும் தினம் யாது?
1) யூன் 30  2) யூலை 1  3) யூலை 2

21) 10 படிகள் உள்ள படிக்கட்டில் A முதல் படியிலும் B பத்தாம் படியிலும் நிற்கின்றனர். A ஒரு படி ஏறும் போது B இரு படி இறங்கினால் அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?
1) 4  2) 5  3) 6




22) முப்பதாயிரத்து இருநூற்று பதினைந்து என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களை பின்னால் இருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?
1) 51203  2) 30215  3) 50312

23) ரவியின் வீட்டில் இருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 15km ஆகும். அவன் அத்தூரத்தின் 1 பங்கை புகைவண்டியிலும் மிகுதித் தூரத்தை துவிச்சக்கரவண்டியிலும் சென்றான். அவன் புகைவண்டியில் சென்ற தூரம் யாது?
1) 10km  2) 12km  3) 9km

24) இலங்கையின் முதலாவது சுதந்திர தின விழாவை மிக விமர்சையாக கொண்டாடினோம் இக் கூற்று யாரால் கூறப்பட்டிருக்கலாம்?
1) ஒரு சிறுவனால்  2) ஒரு இளைஞரால்  3) ஒரு முதியவரால்

25) ஈர்க்குத்துண்டுகளைப் பயன்படுத்தி சதுரங்கள் அமைக்கப்பட்ட முறை தரப்பட்டுள்ளது. இதன் தொடராக 10 சதுரங்கள் அமைப்பதற்கு தேவையான ஈர்க்குகள் எத்தனை?
1) 31  2) 40  3) 36



26) தற்போது சாருலதாவின் வயது 12 வருடங்கள் அவளது தாயின் வயது சாருலதாவின் வயதைப் போல நான்கு மடங்காகும். சாருலதா பிறக்கும் போது தாயின் வயது யாது?
1) 36 வருடங்கள்  2) 48 வருடங்கள்  3) 40 வருடங்கள்

27) கீழே தரப்பட்ட எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்கள் யாவை?

45, 40, 38, 30, 26, 25, 20, 15

1) 38உம்,26உம்  2) 35உம்,15உம்  3) 38உம்,20உம்


28) இன்று டிசம்பர் 29ஆம் திகதி திங்கட்கிழமையாகும். அடுத்த திங்கட்கிழமை எத்தனையாம் திகதி?
1) ஜனவரி 4ஆம் திகதி  2) ஜனவரி 5ஆம் திகதி  3) ஜனவரி 7ஆம் திகதி

29) விருதுநகர் ஆரம்ப வித்தியாலய கண்காட்சி ஒன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி 6 நாட்கள் நடைபெற்றது. எனின் கண்காட்சி முடிவடைந்த நாள் யாது?
1) ஞாயிறுக்கிழமை  2) திங்கட்கிழமை  3) சனிக்கிழமை


30) 5 பெண் பிள்ளைகள் வரிசையாக நின்றனர். சங்கவிக்கு பின்னால் கவிதா நின்றாள். சங்கவிக்கு முன்னால் ஓவியா நின்றாள். ராதிகாவிற்கு பின்னால் வாசுகியும், வாசுகிக்கு பின்னால் ஓவியாவும் நின்றனர். எனவே நடுவில் நிற்பவர் யார்?
1) ஓவியா  2) வாசுகி  3) சங்கவி

31) இரண்டு பகுதிகளும் சமமாக இருக்கும் கோவையை தெரிவு செய்க
1) 18 + 11 + 15 = 27 + 8 + 15
2) 32 + 16 + 8 = 22 + 20+ 14
3) 16 + 9 + 15 = 14 + 26+ 13

32) பூரணி நூலகத்தில் இருந்து வீட்டுக்கு சென்ற பயணப்பாதை காட்டப்பட்டுள்ளது. அவள் சென்ற திசையை ஒழுங்கு முறையாக காட்டும் விடையின் கீழ் கோடிடுக




1) தெற்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்மேற்கு
2) தெற்கு, வடமேற்கு, மேற்கு, தென்மேற்கு
3) தெற்கு, தென்கிழக்கு, வடக்கு, வடகிழக்கு

மரக்கிளையில் இருந்து மாம்பழக்குருவி ஒன்று  ஒரு மொட்டைப் போல காட்சி அளித்தது. இடையிடையே தன் தலையை அசைத்து பார்த்த குருவி தனக்கு ஆபத்து என எண்ணும் எதனையும் காணவில்லை

33) இடைவெளிக்குள் வரவேண்டிய விடையை தெரிவு செய்க
1) வாசமுள்ள / ஏற இறங்க  2) மலரப்போகும் / சுற்றும் முற்றும்  3) தங்கநிறமான / அங்குமிங்கும்

# விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்

### வலிகாமம் விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வளவாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை கொண்டு வருவதே எமது விவசாயிகள் சங்கத்தின் பிரதான இலக்காக இருப்பதாக வலிகாமம் பகுதி விவசாயிகள் முன்னேற்றச்சங்கத்தின் தலைவர் வை. மோக நாதன் தெரிவித்தார்.

தமது விவசாயத் தொழிலை முறையாக முன்னெடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விவசாயிகளின் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் அதன் தலைவர் விஜயரட்ணம் விஜிதன் ஏற்பாட்டில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய தலைவர் மேலும் தனது உரையில்,

பல்வேறு காரணங்களால் வளவாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில் தமது ஜீவனோபாய தொழிலை தொடரமுடியாதிருக்கும் விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை கொண்டுவருவதே எமது பிரதான நோக்கம்.

இதற்காக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகளின் முறையான தொடர்பாடலுக்கு வசதியாக தமக்கிடை யில் ஸ்திரமான நிர்வாகக் கட்டமைப் பொன்றை கொண்டிருப்பது மிக அவசியமான ஒரு நடவடிக்கையாக நாம் கருதுகிறோம்.

பரவலாக யாழ் மாவட்டத்தில் கடந்த சில வருடங்களாக நிலவிய வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கால்' எமது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் வங்கிகள் மூலம் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாது பெரும் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர்.

இக் கடன்களை ரத்துச் செய்ய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதிக்கு விரைவில் மகஜர் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டார். விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் வலி தெற்கு அமைப்பாளர் சா. தங்கராசா தனது உரையில்,

நீண்ட காலம் நிலவிய போர்ச் சூழலில் வரையறையற்ற உரப்பாவனை, மற்றும் கிருமி நாசினி பாவனையால் குடாநாட்டின் மண்வளத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாதிப்புக்கள் பற்றிய ஆய்வுகள் இன்னமும் முறையாக மேற்கொள்ளப்படாதுள்ளன.


மறுபுறத்தில் விவசாய உள்ளீடுகளை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் பரவலாக பெற்றுக் கொள்ள முடியாத நிலமையும் கவனத்துக்குரிய ஒரு பிரச்சினையாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (24)

# காரைநகர் மணிவாசக சபையின் திருவாசக விழா இன்று

காரைநகர் மணிவாசக சபையின் மணிவாசகர் விழா ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது முதல் நாள் விழா, ஓய்வு பெற்ற, வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையிலும் இரண்டாம் நாள் விழர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையிலும் மூன்றாம நாள விழா, மணிவாசகர் சபைத் தலைவர், பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை தலைமையிலும் இடம் பெறும்.

முதல் நாள் நல்லை ஆதீன முதல்வர், ஆசிகூறி விழாவை ஆரம்பித்து வைக்க ஆதீனகர்த்தா மு.சுந்தரலிங்கம் திருவாசகத் திருமுறை ஓதுவார். ஏனைய தினங்களில் ஈழத்துச் சிதம்பர மகோற்சவ குரு சிவஸ்ரீ தி.உமாசுதக் குருக்களும் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளும் ஆசியுரையினை நிகழ்த்துவர்.

விழாநாட்களில் கவிஞர் வே.குமாரசுவாமி, "வேண்டத்தக்க தறிவாய் நீ" எனும் பொருளிலும் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் "ஆரா அமுது" எனும் பொருளிலும் செஞ்சொற் செம்மல் ச.விநாயகமூர்த்தி "மாசு இலாமணி" எனும் பொருளிலும் சிவத்தமிழ்க்காவலர் ஆ.செந்தில்நாதன் "நிற்பார் நிற்க" எனும்பொருளிலும் தமிழருவி த.சிவகுமாரன் "பரம் பாண்டியனார்"எனும் பொருளிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (24)



முகமாலை கிராமத்தில் பாடசாலை செல்லும் 60 மாணவர்களுக்கு புதுவருடத்தை முன்னிட்டு சிற்றி கழகத்தினால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (37)

# மார்கழித் திருவெம்பாவை

## இன்று 7ஆம் நாள்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானைப் புகழ்ந்தும் அவருடைய அருட்பெருங்கருணையை வியந்தும் மணிவாசக சுவாமிகளால் திரு வாய் மலர்ந்து அருளிச் செய்யப்பெற்ற தித்திக்கும் தீந் தமிழ்ப் பனுவல் திருவாசகம்.

அந்த இனிய திருவாசகத்தில் வரும் ஓர் இனிய பகுதி தான் திருவெம்பாவை. அந்த வீசேட பதிகமான திருவெம்பாவை பத்து நாட்களுக்கு எல்லா ஆலயங்களிலும் ஓதப்படுகின்றது.

அந்தத் திருவாசகத்தேனின் துளிகளான "திருவெம்பாவை இருபது" பாடல்களையும் அதற்கான பொருள் விளக்கத்துடன் தினம் இரண்டு பாடல்கள் வீதம் "தினமுரசு" வாசகர்களுக்குத் தருகின்றோம். படித்துப் பயன்பெறுக.

**திருவெம்பாவை**

மொய்யார் தடம்பொய்கை புக்குமுனேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எம்மையேலோர் எம்பாவாய்!



**பொருள்விளக்கம்.**

நெருப்பைப் போன்ற சிவந்த நிறமுடைய சிவபெருமானே? வெண்மை நிறமுடைய திருநீற்றை அணிந்திருப்பவனே! சகல செல்வங்களையும் உடையவனே! சின்னஞ்சிறிய இடையையும் மை தீட்டிய அழகான நீண்ட கண்களையும் உடையவளாகிய உமாதேவியாரின் அன்பு மணவாளனே! ஐயனே! உங்களுக்கு வழிவழி அடிமைகளாகிய நாங்கள் வண்டுகள் மொய்க்கின்ற அகன்ற பொய்கையிலே "முகேர்" என்று மூழ்கிக் கைகளால் நீரைக் குடைந்து குடைந்து கழல் அணிந்திருக்கின்ற உன்னுடைய அழகான திருப்பாதங்களை புகழ்ந்து புகழ்ந்து பாடி மகிழ்கின்றோம்! எங்களது ஒப்புவமையற்ற தலைவனே! நீ ஆட்கொண்டு அருளும் திருவிளையாடலின் வழிபட்ட அடியார்கள் செல்லும் நெறியெல்லாம் நாங்களும் சென்று முடித்தோம்! ஆகவே நாங்கள் இணைந்து விடாமல் எங்களைக் காப்பாற்றுவாயாக! தண்ணீரிலே குடைந்து குடைந்து விளையாடியபடி சிவபெருமானைப் பாடி மகிழ்ந்திருப்போம் என்பதாம்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்பவார் கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் சண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தியிருஞ்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய்!



**பொருள் விளக்கம்.**

நன்மைகள் செய்கின்ற தில்லைச் சிற்றம்பலத்திலே, ஒரு திருக்கரத்தில் தீயை ஏந்தி நடராஜப் பெருமானாக திருத்தாண்டவம் ஆடுகின்றான். நம்மைப் பீடித்துள்ள பெரிய பிறவித்துன்பம் கெடும்படி, நாம் மகிழ்ச்சியுடன் துள்ளித்துள்ளி ஆடுவதற்குரிய தீர்த்த வடிவமாக அவன் விளங்குகின்றான். அத்தகைய சிவபெருமான் இந்த நிலவுலகத்தையும் வானத்தையும் நம் எல்லோரையும் படைத்தும் காத்தும் அழித்தும் விளையாடுகின்றவன். அந்தத் தில்லை நடராஜப் பெருமானுடைய பொருள் சேர் புகழைப் பேசிக்கொண்டு கைவளையல்கள் ஒலிக்கவும் இடையில் அணிந்துள்ள "மேகலை"களின் ஒலி துள்ளவும் மலர் சூடிய நீண்ட கருங்கூந்தலின் மேல் வண்டுகள் ஒலி எழுப்பவும் தாமரைப் பூப் போட்ட பொய்கை நீரைக் குடைந்து நம்மை உரிமையாகவுடைய தலைவனது பொன் போன்ற திருவடி மலர்களைக் கை குவித்து வணங்கி பெரியளவிலான சுனை நீரில் நாம் துள்ளியாடுவோமாக. பிறவிப்பிணி தீரச் சிவபைப் பாடிப்பணிவோம் என்பதாம்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங்குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!



**பொருள் விளக்கம்.**


பசுமையான கரிய குவளை மலராலும் சிவந்த அழகிய தாமரை மலராலும் அழகான நீர்ப்பறவைக் கூட்டங்களாலும் மேலும் பாம்புகளாலும் தமது அழுக்கைப் போக்க விரும்புவோர் அங்கு வந்து சேர்தலினாலும் எங்கள் அன்புத் தலைவியான உமாதேவியாரையும் எங்கள் தலைவர் சிவபெருமானையும் ஒத்திருக்கும் நீர் நிறைந்த பொய்கையில் புகுந்து பாய்ந்து பாய்ந்து எமது சங்கு வளையங்கள் ஒலிக்கவும் சிலம்புகள் வளையல்களின் ஒலியோடு கலந்து சததம் செய்யவும் மார்பகங்கள் குலுங்கவும் குளிக்கின்ற தண்ணீரானது மேலெழவும் தாமரைப் பூக்கள் நிறைய மலர்ந்திருக்கின்ற தெளிந்த நல்ல தண்ணீரில் குதித்துக் குதித்து நீராடி மகிழ்வோமாக. தோழியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து தண்ணீரில் விளையாடி மகிழ்வோமாக என்பதாம்.

*சிவநெறிக் கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்*

www.mahinda2015.com

# நிறுத்த முடியாத இலங்கை


**முன்னெப்போதுமில்லாத அளவில் கடந்த 06 ஆண்டுகளாக தொடர்ச்சியான ஒற்றை இலக்க பணவீக்க அளவினை கொண்டிருப்பது இலங்கையின் பொருளாதாரத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.**




வரலாற்றில் முதல் முறையாக பணவீக்கம் கடந்த 71 மாதங்களாக சராசரியாக 5.6% ஆக காணப்பட்டது.

2014ம் ஆண்டு முழுவதும் பணவீக்கம் 5% த்திலும் குறைவாகவும், 2014 டிசெம்பரில் ஆகக்குறைந்த 2.1% ஆகவும் காணப்பட்டது.

**ஐ.நா மில்லேனியம் அபிவிருத்தி திட்ட இலக்குகளை விடவும் அதிகமாக தாண்டிச் சென்று, இலங்கையின் வறுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பு 2012/2013 ஆம் ஆண்டில் 6.7% ற்கு வேகமாக குறைவடைந்தது.**




1990 ஆம் ஆண்டு இலங்கையின் வறுமை கோட்டிற்கு கீழுள்ள மக்களின் அளவு 26.1% ஆக காணப்பட்டது. ஐ.நா. மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளின் கீழ் 1990 மற்றும் 2015 இற்கும் இடையில் வறுமையை முற்றாக ஒழிப்பதே இலக்காகும்.

வேலை வாய்ப்புகளின் உருவாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பினை கொண்ட விரைவான பொருளாதார வளர்ச்சியை இலங்கை கொண்டுள்ளது. வேலைவாய்ப்பின்மை முன்னர் எப்போதும் இல்லாத அளவில் 4% ற்கு குறைவடைந்துள்ளது. இலங்கையை நிறுத்த முடியாது.

## பாதுகாப்பான தேசம்

## வளமான எதிர்காலம்

# யாழ். முஸ்லிம் மக்களின் உயர்வுக்கு தோள்கொடுத்து உதவியது யார்?

## விலாவாரியாக விளக்குகிறார் சுபியான்

யாழ்.மற்றும் கிளிநொச்சி முஸ்லிம் மக்களினதும் பிரச்சினையைத் தீர்த்து எமது முஸ்லிம் மக்களுக்கும் அரசியல் வழிகாட்டியாகவும் தலைவராகவும் விளங்குபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே வெற்றி பெற வேண்டும் என்ப தில் உறுதியாக இருக்கிறார். எனவே முஸ்லிம் மக்களாகிய நாமும் அவரது நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம் என யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார்.



நேற்று யாழ். ஐந்து சந்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நிலையத் திறப்பு விழாவில் தலைமை வகித்து உரையாற்றும் போதே மௌலவி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், வடபுலத்து முஸ்லிம்கள் 24 மணிவரை அவகாசத்தில் சொந்த மண்ணிலிருந்து சொப்பிங் பேக்குகளுடன் விரட்டப்பட்ட போது அம்மக்கள் எங்கே செல்வது எனத் தெரியாமல் தவித்திருந்த சமயத்தில் எந்தவொரு முஸ்லிம் தலைவர்களோ அன்றி தமிழ்த் தலைவர்களோ முன்வராத நிலையில் எம்மை அரவணைத்து உதவிக்கரம் நீட்டியவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

புத்தளப் பகுதியில் எமது மக்கள் குடியேற உதவியவர். நாம் தங்கியிருந்த முகாம் தீப்பற்றி எரிந்த போது எவருமே எமக்கு உதவ முன்வராத நிலையில் தனது பாதுகாப்பையும் பொருட்படுத்தாமல் தனது சொந்த செலவில் முகாம் அமைத்துத் தந்தவர் அமைச்சர் அந்த முகாம் தேவாபாத் என்ற பெயரில் இன்னும் இருக்கக் காணலாம்.

அதுமட்டுமல்லாது எமது வடபுலத்து முஸ்லிம்கள் படித்தவர்களாக இருப்பதற்கும் காரணம் அமைச்சர் தான் புத்தளத்திலே இருந்த காலத்தில் எமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக கட்டடங்கள், பாடப்புத்தகங்கள், புலமைப பரிசில்கள், நிதிஉதவிகள் என வழங்கியவர்.

அதுமட்டுமன்றி எமது மக்களின் குரலை தொடர்ந்து ஒலித்துக் கொண்டே எமது மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சரின் கட்சியால் நடாத்தப்பட்டு வந்த இதய வீணை நிகழ்ச்சியில் எமது மக்களின் உணர்வுகளை தொடர்ந்து ஒலிக்கச் செய்து சர்வதேச நாடுகளுக்கும் எட்டச் செய்தவர்.

நாங்கள் மீள்குடியேறிய பின்னரும் எமது மக்களின் தேவைகளைப் படிப்படியாகப் பூர்த்தி செய்து வருபவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே ஆவார்.

முன்னாள் முஸ்லிம் அமைச்சர்களான ஹக்கீம், ரிஷாட் ஆகியோர் தத்தமது அமைச்சுக்களின் செயற்பாடுகள் காரணமாக இங்கு பலதடவைகள் வருகைதந்துள்ளனர். எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளை நான் அவர்களிடத்திலும் சமர்ப்பித்திருந்தேன். எதுவுமே நடக்கவில்லை. ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து தொலைபேசியில் கூறினால் கூட நிச்சயம் அதனை நிறைவேற்றித் தருபவராக இருக்கிறார்.

அந்தவகையில் எமக்கு அரசியல் ரீதியிலான வழிகாட்டியாகவும் தலைவராகவும் திகழும் அமைச்சரின் நிலைப்பாட்டையே நாமும் கொண்டுள்ளோம். எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கும் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே வெல்வார் என்பதே தென்பகுதியின் நிலைப்பாடாக இருக்கிறது. எனவே அவரது வெற்றியில் எமது மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். எமது மக்களுக்கு இன்னும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை அவரது நீடித்த ஆட்சியில் நிச்சயமாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது எனத் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சட்டத்தரணி ரெமீடியஸ் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# யுத்தத்தில் கிடைத்த வெற்றியை பிரசார ஆயுதமாக பயன்படுத்தவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

புலிகளுடனான யுத்த வெற்றியை பிரசார ஆயுதமாக நான் பயன்படுத்தப் போவதில்லை எனினும் யுத்த வெற்றிதான் நாட்டு மக்களின் வாழ்வில் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தியது என்று ஜனாதிபதி மகிந்தராஜபக்ச தெரிவித்தார்.

ஆங்கில தினசரி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கடந்த தேர்தல்களில் எனது வெற்றிக்கு காரணமாக இருந்த சிறுபான்மை சமூகத்தினரின் சில பிரிவினர் வேறு பாதைகளைத் தெரிவு செய்திருக்கலாம், அதற்காக மக்கள் தன்னிடமிருந்து தனிமைப்பட்டுவிட்டதாக கருதவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2005 மற்றும் 2010 தேர்தல்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதாக தான் வாக்குறுதியளித்த போதிலும் அதைவிட முக்கியமான விவகாரங்கள் காணப்பட்டதால் அத்னை நிறைவேற்ற முடியவில்லை, பயங்கரவாதத்தை அழித்தல், சமாதானத்தை, நல்லிணக்கத்தை, அபிவிருத்தியை ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது, இது குறித்து நான் கவலைப்படவில்லை, இவற்றிற்கு தீர்வு காணாமல், நிறைவேற்று அதிகார முறையை நீக்க முற்பட்டிருந்தால் பாரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கும்.

தற்போது இதனைச் செய்ய கூடிய நிலையிலுள்ளோம்.ஆனால் மிகுந்த அவதானத்துடனேயே அதனைச் செய்யவேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்களை நான் உரிய மரியாதையுடன் நடத்துகிறேன், உரிய முக்கியத்துவத்தை அளிக்கிறேன்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் எனக்கு எதிராக போட்டியிடுவதற்கு கட்சிக்குள் அவர் புறக்கணிக்கப்பட்டதாக கருதுவது காரணமல்ல.

மாறாக அவர் தனக்கான அரசியல் அதிகாரத்தை அதிகரிப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார்,அதற்காக நீண்ட காலமாக தன்னை கௌரவமாக வைத்திருந்த கட்சியை அவர் கைவிட்டுள்ளார்.

மூத்த உறுப்பினர்கள் அலட்சியம் செய்யப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டை நான் முற்றுமுழுதாக நிராகரிக்கிறேன், அரசியல் ஆதாயத்திற்காக இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

# கடற்றொழில் உபகரணங்கள் பற்றாக்குறை பூநகரி மீனவர்கள் தொடர்ந்து சிரமம்

தொழில் உபகரணங்கள் பற்றாக்குறையால் தமது மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பதில் பூநகரி இரணைமாதா நகர் கடற்றொழிலாளர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடலுக்கு சென்று தொழில் செய்யக் கூடியதாக 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கும் நிலையில் சுமார் 100 தொழிலாளர்கள் மாத்திரமே தொழில் செய்யக் கூடிய உபகரணங்கள் இருப்பதால் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்கள் மட்டுமே ஒரு தொழிலாளி கடலுக்குச் செல்லும் நிலமை இருப்பதாக கடற் றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜெயசீலன் தெரிவித்தார்.

கடந்த போர்ச் சூழலில் அனைத்து கடற்றொழில் உபகரணங்களையும் இழந்துள்ளதுடன் எமது சொந்த இடமான இரணைதீவுக்கு சென்று தொழில் செய்ய முடியாத நிலையில் தமது தொழிலாளர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாக அவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

அனைத்து தொழிலாளர்களும் கடலுக்கு செல்வதற்கான கால ஒழுங்கினை சங்க நிர்வாகமே ஒழுங்குபடுத்த வேண்டி இருப்பதால் அனைத்து தொழிலாளர்களும் தினமும் கடலுக்கு செல்லும் வகையில் கால அட்டவணையைத் தயார் செய்வது பெரும் பிரச்சினையாக இருப்பதாக சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்..

ஒரு கடற்றொழிலாளி கடலில் 40வலைகள் வரை கொண்டு சென்று தொழிலில் ஈடுபட முடியும். ஆனால் ஆகக் கூடுதலாக 50 வலைகளை மாத்திரமே படகில் ஏற்ற முடியுமென்பதால் இந்த மட்டுப்படுத்தப்பட்ட வலைகளுடன் 3முதல் 5தொழிலாளி வரை கடலுக்கு செல்ல அனுமதிக்க வேண்டி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.இதனால் ஆகக் கூடியதாக இரண்டு தொழிலாளிகளுக்கு கிடைக்கும் மீன்களை ஐந்து அல்லது ஆறு தொழிலாளிகளுக்கு நாம் பங்கிட வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இதனால் சராசரியாக மிகக் குறைவான வருமானத்தையே பெறும் நெருக்கடியான சூழ் நிலையை தமது தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ளதாக தொழிலின்றித் தவிக்கும் மீனவர் ஒருவர் குறிப்பிட்டார்.இந்த இக்கட்டான நிலையை சீர் செய்வதற்கு குறைந்த பட்சம் 50 படகுகளாவது எமக்கு தேவை. ஏற்கனவே இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கிடைத்துள்ள சிறு தொகுதி உபகரணங்களை மட்டுமே நாம் நம்பி இருக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

தொழில் உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ள போதும் தொழிலாளிகளால் பிடிக்கப்படும் கடலுணவு உற்பத்திகளுக்கு ஆகக் கூடுதலான விலையை வழங்கி தொழிலாளர்களுக்கு சிறப்பாக உதவும் ஒரே ஒரு கடற்றொழிலாளர் சங்கமாக பூநகரி பிரதேசத்தில் எமது சங்கமே விளங்குகின்றது என அவர் பெருமையுடன் கூறினார். (24)

### கூட்டமைப்பின்...

அந்தக் கருத்துக்கள் எதுவும் ஏற்கப்படவில்லை.

ஆட்சி மாற்றம் தேவை என்ற பொதுவான கருத்தின் அடிப்படையில் எந்த நிபந்தனைகளும் இல்லாமல் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற யோசனைகள் நிகரிக்கப்பட்டன. ஏனெனில் அவ்வாறு ஏதேனும் கூறிவிட்டால் பொது எதிரணிக்கான சிங்கள பௌத்த வாக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

ஆனால் சர்வதேச மத்தியஸ்தம் தேவை என்ற கருத்து நியாயமானது. ஆனால் கூட்டமைப்பின் தலைமை அதனை ஏற்கவில்லை.

வெறுமனே அராஜக ஆட்சி, குடும்ப ஆட்சி ஜனநாயக விரோத செயற்பாடுகள் போன்றவற்றிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற பொதுவான கருத்து மாத்திரமே முன்வைக்கப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் பற்றி எதுவுமே பேசப்படவில்லை.

மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் என்ன கூறுகின்றனரோ அந்தக் கருத்தைத்தான் சம்பந்தனும் கூறுகின்றார்.

ஆட்சி மாற்றம் தேவை என்ற கருத்துக்குள் இனப்பிரச்சினை என்ற விடயம் புறம் தள்ளப்பட்டுள்ளது என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

### ஆணின்...

இவர் தாக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, வவுனியா, சாஸ்திரி கூழாங்குளம் குளத்தில் இருந்து வயோதிப மாது ஒருவரின் சடலம் நேற்றுக்காலை பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. அப்பகுதி ஊடாக சென்றவர்கள் சடலத்தை கண்டு பொலிசாருக்கு தெரியப்படுத்தியதையடுத்தே அது மீட்கப்பட்டது. வவுனியா சுந்தரபுரத்தைச் சேர்ந்த முத்தையா தெய்வானை (வயது 69) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வடக்கில்...

வடக்கு கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், கட்சிகள், முஸ்லிம்கள் கட்சிகள் மாத்திரமின்றி ஜாதிக ஹெல உறுமய கட்சியும் போன்ற தென் பகுதி கட்சிகளும் பொது எதிரணிக்கு ஆதரவு வழங்கி எமது அணியுடன் இணைந்துள்ளன.

நாட்டில் மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்தித்திட்டங்களில் 50 வீதம் கொள்ளையிடப்பட்டு வருகிறது. கடந்த 10 வருடங்களில் எந்தளவு பணத்தை அரசாங்கத்தில் இருப்பவர்கள் கொள்ளையிட்டு இருப்பார்கள் ஏன்பதை உங்களால் கணக்கிட முடியாது எனவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

### பிரதிக்...

பொலன்நறுவை மாவட்டத்தின் 17 ஆளும் கட்சி பிரதேச சபை உறுப்பினர்கள் மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

### தொடரும்...


கடந்த செவ்வாயன்று அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாத நிலையில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். வைத்திய சேவைகளும் 75 வீதம் ஸ்தம்பித்திருந்தது.

அவ்வாறே மீண்டும் வலியுறுத்தி 3 நாட்களுக்கு சுகயீன விடுமுறை எடுப்பதன் மூலம் பணிப்பகிஷ்கரிப்பை மேற் கொள்வுள்ளதாகவும், இதனால் சிகிச்சைகள் முற்றிலும் ஸ்தம்பிதமடையும் நிலையும் ஏற்படக் கூடும் எனவும் தாதியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (இ.25)

# கூட்டமைப்பினர் தமிழர்களுக்கு வரலாற்று துரோகமிழைத்து விட்டனர்

**- சந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு -**





தாமும் விலைபோய் மக்களையும் அடகுவைத்ததனூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழருக்கு மாபெரும் வரலாற்று துரோகமிழைத்துவிட்டனர் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று அம்பாள் குளத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்,

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளர் என்ற போர்வைக்குள் திரண்டிருப்பவர்கள் பற்றி எமது மக்கள் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். அதில் முக்கிய பங்காற்றும் சந்திரிகா அம்மையார் மற்றும் ரணில் விக்கிரமசிங்க அத்துரலிய ரத்தினதேரர் சரத்பொன்சேகா சம்பிக்கரணவக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் எவ்வாறான கொள்கையுடையவர்கள் என்பது தொடர்பாக மக்கள் தெரிந்துவைத்திருப்பது மிக அவசியமானது.

இவர்களில் சந்திரிகா அம்மையார், பெறப்பட்ட யுத்த வெற்றியில் எழுபத்தைந்து விகிதமான பங்கு தனக்கே உரியது என குறிப்பிடுகின்றார். அப்படியாயின் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அழிவுக்கு பொறுப்பானவர் அவராகவே இருக்கமுடியும்.

இது இவ்வாறிருக்க ரணில் விக்கிரமசிங்க புலிகளை பேச்சுவார்த்தை என்ற வலைக்குள் இழுத்து அவர்களை பலவீனப்படுத்தி அவர்களின் தலைமைகளுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தியதனூடாக இந்த யுத்த வெற்றிக்கு பிரதான பங்கை ஆற்றியது தானே என வெற்றிக்கு உரிமை கோரியுள்ளார்.

அவரது இந்தச் செயற்பாட்டுகளுக்குப் பின்னால் புலிகள் பிளவுபட்டதனால் நடந்த உள்ளக யுத்தத்தில் பல போராளிகள் சாவடைந்தனர் என்பது மக்கள் அறியாதது அல்ல. அதற்கு வழிவகுத்தவர்தான் ரணில் விக்ரமசிங்க.

அதுபோன்று சரத் பொன்சேகாவும் இறுதி யுத்தம் வரை பீரங்கிகளுடன் வந்து மக்கள் மீது குண்டுமழை பொழிந்து பச்சிளம் பாலகர் தொடக்கம் வயது வேறுபாடின்றி மக்களை கொன்றொழித்தவர்.

அவர்களுடன் இருக்கும் மற்றவர்கள் ஜாதிக ஹெல உறுமய எனும் இனவாதக்கட்சியினரான அத்துரலிய ரத்தினதேரர் எனும் இனவாதப்பிக்குவும் மற்றும் சம்பிக்க ரணவக்க எனும் இனவாதியும். அவர்கள் எப்போதும் தீவிர இனவாதத்தை கக்குபவர்கள். அவர்கள் இந்த நாடு பௌத்த சிங்கள நாடு, ஏனையோர் வந்தேறுகுடிகள் எனவே பௌத்தர்களுக்குரிய உரிமை ஏனையோருக்கு கிடையாது என்ற கருத்தை வலியுறுத்தி வருபவர்கள். இந்த இனவாதக் கூட்டுக்குள் தான் மைத்திரிபால சிறிசேனவும் புகுந்துள்ளார் என்றார்.

இக்கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன். கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி ஆகியோரும் உரையாற்றினர்.

# தேர்தல் பிரசாரத்தில் குமார் குணரட்ணம்

(கொழும்பு)



எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக பிரசாரம் செய்யும் நோக்கில் முன்னணி சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை குமார் குணரட்ணம் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளதாக கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொ தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலைய தகவல்களும் குமார் குணரட்ணத்தின் வருகையை உறுதி செய்துள்ளன.

நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறிச் செயற்பட்டதாகத் தெரிவித்து குமார் குணரட்ணத்தை அரசாங்கம் அவுஸ்ரேலியாவிற்கு நாடு கடத்தியதுடன், குடிவரவு சட்டங்களை மீறியதற்காக அபராதம் ஒன்றையும் விதித்திருந்தது.

இந்த அபராதத் தொகை அண்மையில் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக முன்னணி சோசலிச கட்சி குற்றம் சுமத்தி வருகிறது.

இந்த இரகசிய உடன்படிக்கை பற்றி அம்பலப்படுத்தும் நோக்கில் குமார் குணரட்ணம் கொழும்புக்கு விஜயம் செய்வார் என கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது.

முன்னணி சோசலிச கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் துமிந்த நாகமுவவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் குமார் குணரட்ணம் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் வருவார் நடிகர் சல்மான் கான்



(கொழும்பு)

'கிக்' திரைப்படத்தில் தனக்கு ஜோடியாக நடித்த நடிகை ஜெக்குலின் பெர்ணாண்டஸின் அழைப்பின் பேரிலும் இலங்கையில் மருத்துவ முகாமொன்றை நடத்துவதற்காகவுமே இலங்கைக்குச் சென்றேன் என்று அண்மையில் இலங்கைக்கு வந்து சென்ற பொலிவூட் நடிகர் சல்மான்கான் தெரிவித்துள்ளார்.

சல்மான்கானின் இலங்கை விஜயம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், தனது விஜயம் தொடர்பில் டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் விளக்கமளித்துள்ளார் சல்மான் கான்.

இது தொடர்பில் டுவிட்டரில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தொடர்ந்தும் இலங்கைக்குச் செல்வேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

'ரெடி' திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்ற காலப்பகுதியில் நாம் இலங்கையில் மருத்துவ முகாமொன்றை நடத்தினோம். 'கிக்' திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த போது, இலங்கைக்கு சென்று மீண்டுமொரு மருத்துவ முகாமை நடத்துவதற்கு ஜெக்குலின் பெர்ணான்டஸ் அழைப்பு விடுத்தார்.

அத்துடன், ஜெக்குலினின் உணவு விடுதிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணமும் எனக்குள் இருந்தது. எமது தீர்மானத்திற்கிணங்க, மேற்படி மருத்துவ முகாமை நடத்தினோம். ஜெக்குலினின் உணவு விடுதிக்கும் சென்றேன்.

இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாகும். மீண்டும் பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு செல்வேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என சல்மான்கான் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கெட்டுப்போகும் சுற்றுச்சூழல் கிளிநொச்சியில் முளைவிடும் நெருக்கடி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக பல்வேறுபட்ட சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. முறையாக திட்டமிடப்படாத திண்மக்கழிவு அகற்றல் நடைமுறைகள் மாவட்டத்தில் இருப்பதுடன், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின்றி பல்வேறு தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் பல்வேறு இடங்களில் உவர் நீர்த்தடுப்பு அணைகள் இல்லாததால் உவர்நீர் உட்புகும் ஆபத்துள்ளது. சட்டவிரோத காடழிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வு, பூநகரி பிரதேசத்தில் காணப்படும் மணல் திட்டுக்களின் திட்டமிடப்படாத பாதுகாப்பு முறைகள் போன்ற பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் முன்னெடுத்தல், ஆரம்ப பாடசாலைகளில் சுற்றாடல் சிறுவர் கழகங்களை உருவாக்குதல், வர்த்தமானிப்படுத்தப்பட்ட சகல தொழிற்சாலைகளுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை வழங்குதல், சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை வலுவூட்டுதல், சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்துதல், மாவட்டத்தில் முறையான திண்மக்கழிவகற்றலை அமுல்படுத்துதல், பல்வேறு இடங்களில் இலத்திரனியல் கழிவு கொள்கலன்களை நிறுவுதல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதிகார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிரதேச சபை உறுப்பினர்கள் 17 பேர் மைத்திரி பக்கம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேசசபைகளின் உறுப்பினர்கள் 17 பேர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இவர்களில் இரண்டு பிரதேசசபைத் தலைவர்கள் மற்றும் இரண்டு உப தலைவர்களும் அடங்குவதாக தெரியவந்துள்ளது.

பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இதனைக் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஹிகுரான்கொட பிரதேசசபைத் தலைவர் சுசன்ன ஞானரத்ன, தமன்கடுவ பிரதேசசபைத் தலைவர் ஹேமசிறி முனசிங்க, திபுலாகல பிரதேசசபையின் உபதலைவர் புஸ்பகுமார ரணசிங்க, லங்காபுர பிரதேசசபை உபதலைவர் பந்துல சமன்சிறி உள்ளிட்ட 17 பேர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

அத்துடன் கம்பஹா மாநகரசபை பிரதிமேயர் அஜித் பஸ்நாயக்க, மைத்திரிபாலவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

## கம்பஹா பிரதி மேயர் மைத்திரி பக்கம்

(கொழும்பு)

கம்பஹா மாநகரசபை பிரதி மேயர் அஜித் பஸ்நாயக்க, பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை



உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை நேற்று (01.01.2015) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகத்தியன் - இலட்சுமியின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், இந்திராணி, தங்கராணி, டில்லிராணி, பரமானந்தசிவம், பரமானந்ததயாளன், சசிகலாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசதுரை, தியாகராசா, காலஞ்சென்ற தில்லைநாதன், விஜயசுலோசனா, பிறேமிலா, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மு.ப. 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்பகப் பிள்ளையார் கோவிலடி,**
**உடுவில் கிழக்கு.** (இ)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.